# திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.




மே. 1962 — மே மலர் — விலை 25 காசு



# அண்ணாவுடன் நான்



## 11

சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கம்பர் மாநாட்டினை மாலை 4 மணியிலிருந்து இரவு 10 மணிவரையில் நடத்துவதென்று திட்டமிட்டிருந்தனர். ஆம் 1500 பேர் மட்டுமே அடங்கக் கூடிய ஒரு மண்டபத்தில் நடைபெறும் மாநாட்டுக்கு ஏறத்தாழ பத்தாயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருந்ததால், நாலைந்து மணி நேரமாகிலும் நடத்த வேண்டுமென்று அதன் நிர்வாகிகள் ஆசைப்படுவது நியாயந்தானே!

ஆனால் மாநாட்டுத் தலைவர் பண்டித மணி கதிரேசனாரில் இருந்து பன்மொழிப் புலவர் மீனாட்சிசுந்தரனார் வரையில், ஈரோடு இராமரைக் குறை பேசத்தான் துடித்தார்களே யல்லாது இராமாயண இராமரை அடியோடு மறந்துவிட்டனர்!

இதன் காரணமாக நானும் எனது நண்பர்களும் முறைப்படி (மடல் மூலம்) கேள்வி கேட்கப் போய் ஒரு மணி நேரத்திலேயே அதாவது மாலை 5 மணிக்குள் கம்பர் மாநாட்டு மேடை சுயமரியாதை இயக்க மேடையாக மாறி முடிவுற்றது, என்பதை சென்ற இதழில் வரைந்தேன்.

சென்னை கம்பர் மாநாட்டில் நாங்கள் கேள்வி கேட்கும் அதே நேரம், ஈரோடில் திராவிட மாணவர் கழக மாநாட்டில் அண்ணா அவர்கள் பேசுகிறார்கள்! 'இந்நேரம் சென்னையில் என்ன நடக்கிறதோ அறியேன், இராமாயண பக்தர்கள் கடந்த பல நாட்களாக தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கூட்டங்களை நடத்தி நம்மைக் கேலி செய்து வந்துள்ளனர். இதனால் கொதிப்படைந்துள்ள சென்னையிலுள்ள நம் தோழர்கள் மாநாட்டில் கேள்விகளைக் கேட்க என்னிடம் அனுமதி கேட்டார்கள். நான் அப்படியெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி வந்தேன். என்றாலும் என்ன நடக்கிறதோ என்று குழம்புகிறேன்'' என்று அண்ணா அவர்கள் ஈரோடு மாநாட்டில் குறிப்பிட்டுப் பேசும் நேரத்தில்தான் சென்னை கம்பர் மாநாட்டில் கம்பராமாயண படைக்கும், சுயமரியாதை இயக்கப் படைக்கும் சொற்போர் நடைபெற்று, கம்பராமாயண படை ஓட்டம் பிடித்தது!

சென்னைச் சம்பவம் ஈரோடுக்கு அன்றிரவேவந்தது! பெரிய அமளி ஏற்பட்டு விட்டதையும் அதன் காரணமாக என் மீது ராமாயண மாநாட்டினர் வழக்கு தொடரப் போவதாகவும் அன்று மாலை எல்லாப் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தன. இந்த விவரமும் ஈரோடுக்கு எட்டிற்று. பெரியார், அண்ணா, மறைந்த தலைவர் சவுந்திரபாண்டியனார் மற்றும் இயக்க முன்னணியினர் இது குறித்துக் கலந்து பேசினர்.

அதுசமயம், சவுந்திரபாண்டியனார் அவர்கள், அறிஞர் அண்ணாவைப் பார்த்து, 'அண்ணாதுரை நம்ம பிள்ளைகளுக்குத் தைரியம் சொல்லுங்கள். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நாம் இத்தனை ஆண்டுகளாக செய்த பிரசாரத்தினால் கிடைக்காத வெற்றி இன்று நமது இயக்கப்பிள்ளைகளால் கிடைத்திருக்கிறது. நடராசன் மீது வழக்குத் தொடரட்டும்—எவ்வளவு செலவு ஆனாலும் நான் பார்த்து விடுகிறேன். உடனே புறப்பட்டுப் போய் அவர்களுக்கு நீங்கள் உற்சாகத்தை அளியுங்கள் என்று கூறியது மட்டுமல்லாமல் பெரியார் அவர்களைப் பார்த்து, அய்யா நீங்கள் வழக்கம்போல பெரிய மனிதர்கள் என்பவர்களுக்காக தாட்சண்யம் பார்த்து இயக்கத் தொண்டர்களைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள். இதில் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்த நாள் ஈரோடிலிருந்து பெரியார், அண்ணா இருவரும் சென்னை வந்து சேர்ந்தனர். நானும், புலவர் செல்வராஜ் உள்ளிட்ட தோழர்களும் அவர்களைச் சந்தித்து முழு விவரமும் கூறினோம். உடனே பெரியார் அவர்கள் ''வேணுமுங்க அவங்களுக்கு இந்த பி. டி. ராசனுக்கு என்ன வந்ததாம்'' என்று கூறினார்கள்.

உடனே அண்ணா அவர்கள் எங்களை அழைத்து சவுந்திரபாண்டியனார் சொன்ன ஆறுதல் மொழிகளையும் உற்சாகத்தையும் விளக்கமாகக் கூறியதோடு நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம் என்றும் தைரியமூட்டினார்கள்.

இதற்குள் டி. எம். நாராயணசாமி அவர்கள் உள்பட கம்பர் விழாக் குழுவினர், பெரியார் அவர்களைச் சந்திக்க அவ்விடம் வந்தனர்; உடனே நாங்கள் வெளியே வந்துவிட்டோம்.

அவர்கள் பெரியாருடன் பேசிக் கொண்டிருந்தபோது அண்ணாவும் உடனிருந்தார். மாநாட்டில் நானும் மற்ற தோழர்களும் கலவரம் செய்து விட்டதாகவும், பெரும் நட்டமேற்பட்டு விட்டதென்றும், வழக்குப் போடக்கூட யோசித்து வருவதாகவும் இப்படியாக தங்களின் தவறுகளை அடியோடு மறைத்துவிட்டு என் மீதும் மற்ற தோழர்கள் மீதும் குற்றப் பத்திரிகை வாசிப்பதைப் போல பெரியார் அவர்களிடம் கூறினர்.

உடனே பெரியார் அவர்கள், சவுந்திர பாண்டியனார் கூறியதையும் மறந்துவிட்டு, அவர்கள் மனம் குளிரும் வகையில் என்னையும் மற்ற தோழர்களையும் கண்டித்துப் பேசினார்.

அதாவது: சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த நாளிலிருந்து பார்க்கிறேன் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொருவன் வந்து என் பெயரைக் கெடுத்துவிடுகிறான்! முன்பு இந்த பொன்னம்பலனார் இப்படித்தான் வம்பு வளர்த்து வந்தார். பிறகு குருசாமி, சைவர் மாநாடுகளில் போய் கலவரம் செய்து இயக்கத்துக்கு கெட்ட பெயர் வாங்கி வைத்தார், இப்போது என்னடாவென்றால் இந்த நடராசன் வந்து சேர்ந்தான். இருக்கட்டும். அய்யா நீங்களெல்லாம் ஒன்றும் கவலைப்படாதீர்கள். அவர்கள் தவறாக நடந்து கொண்டதற்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இந்த வாரம் குடியரசு பத்திரிகையில் அவர்களைக் கண்டித்து எழுதுகிறேன். நீங்கள் வருத்தப்படக் கூடாது. உங்கள் பெருமையைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்'' என்பதாகப் பெரியார் அவர்கள் கம்பராமாயண மாநாட்டில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்களிடம் தெரிவித்தார்கள். அருகிலிருந்து இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அண்ணா அவர்களுக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்ததாம்! என்றாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் சிறிது நேரம் பெரியாரோடு வேறு எதைப் பற்றியோ பேசியிருந்து விட்டு எங்களுக்கும் சொல்லாமல் போய்விட்டார்.

பெரியார் அவர்களின் பேச்சின் காரணமாக திரு. டி. எம். நாராயணசாமி அவர்கள் உள்ளிட்ட விழாக் குழுவினர் தாங்கள் பெரும் வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணி மகிழ்ந்தனர். ஆனால் எங்களுக்குப் பெரும் மன வேதனையாயிருந்தது. மீண்டும் பெரியார் அவர்களைச் சந்தித்தபோது, நான் உங்களைத்தானே கண்டிக்க முடியும். அதற்காக ஒன்றும் வருத்தப் படாதீர்கள் என்று மிகச் சாதாரணமாக எங்களுக்குப் பதில் கூறிவிட்டார்கள். என்றாலும் அந்தப் பதில் 'எங்களுக்கு எரிச்சலைத்தான் உண்டுபண்ணியதே தவிர ஆறுதலை அளிக்கவில்லை.

### என்.வி.என்.

அடுத்த நாள் காஞ்சியிலிருந்து திராவிட நாடு இதழ் வெளி வந்தது. அதன் 16 பக்கங்களும் கம்பர் மாநாட்டு நிகழ்ச்சியைப் பற்றியதாகவே யிருந்தது. நாங்கள் முறைப்படி கேள்விகள் கேட்டதை வரவேற்றும் மாநாட்டில் பேசியவர்களின் போக்கை வன்மையாகக் கண்டித்தும், இது குறித்து எந்த எதிர்ப்பு வந்தாலும் அதை எதிர்நோக்கத் தயாராயிருப்பதாயும் குறிப்பிட்டு விரிவாக அண்ணா அவர்கள் எழுதியிருந்தார்கள்.

இதைக் கண்டதும் எங்களுக்குப் பெரும் உற்சாகம் ஏற்பட்டது. பெரியார் அவர்கள்தான் இப்படிச் செய்துவிட்டாலும் அண்ணா இயக்கத் தொண்டர்களின் பணியினைப் பாராட்டியிருப்பது கண்டு பூரித்தோம். 'திராவிட நாடு' இதழைப் பெரியார் அவர்களும் ஊன்றிக் கவனத்துடன் படித்தார்கள். படிக்கும்போது கோபப் பார்வையும் களைப்பும் மாறி மாறி காணப்பட்டன. படித்து முடித்ததும் சரி இன்றே நான் ஈரோடுக்குப் போகவேண்டும் என்று கோபத்துடன் கூறினார்கள். அது போலவே அன்றிரவு ஈரோடுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஈரோடு சென்ற பெரியார் என்ன செய்தார் என்பது மிக விசித்திரமானதாகவும்; என்றும் நினைவில் கொள்ளவேண்டியதாகவும் இருக்கும். அந்த விவரத்தை அடுத்த வாரம் எழுதுகிறேன்.

(தொடரும்)

# அஞ்சாநெஞ்சன் பதில்!

தனிச் சிறப்பு உண்டு. அந்த விவரங்களை தமிழகத்தின் சென்ற கால அரசியல் வரலாறுகளே எடுத்துக்காட்டும். எனவே இந்தி ஆதிக்க வெறியர்கள் இப்போது எடுத்துள்ள படையெடுப்பையும் முறியடிக்க தி. மு. கழகம் தீவிரமாக முனைந்து நிற்கும்.

ஃ

**மா. திருவேங்கடம் பி.ஏ., மதுரை**

**கே: அவசரச் சட்டத்தைப்பற்றி தி. மு. கழகத்தின் அபிப்ராயம் என்ன?**

## தி. மு. கழகத்தில் ஜெமினி கணேசன்?

## சர்வகட்சி அமைப்பில் தி. மு. கழகம்?

**எஸ். இராமாநுசம், தென்சென்னை**

**கே: இந்தித் திணிப்பை எதிர்க்க சர்வகட்சி அமைப்பில் சேர தி.மு.க. தலைவர் அண்ணாதுரை மறுப்பது ஏன்? எல்லா எதிர்ப்பும் ஒன்று சேருவது தானே எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும்?**

ப: நாட்டின் பொதுவான—முக்கியமான பிரச்சினைகளில் சர்வ கட்சி அமைப்பில் சேர்ந்து பணியாற்றுவதில் திராவிட முன்னேற்றக்கழகம்தான் அதிக பொறுப்புகளை மேற்கொண்டிருந்தது என்பதை நாடறியும். தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினை திருத்தணிப் பிரச்சினை, கோவா கிளர்ச்சி, விலைவாசி உயர்வு எதிர்ப்புக் கிளர்ச்சி உள்ளிட்ட பல முக்கிய பிரச்சினைகளில் தி. மு. கழகம் ஆற்றிய பணி மற்ற கட்சியினர் ஆற்றிய பணியை விட அதிகமானது, தூய்மையானது என்று நாம் கூறினால் மிகையாகாது.

இன்னும் சொல்லப்போனால் தேவிகுளம் பீர்மேடு கிளர்ச்சி, விலைவாசி உயர்வு எதிர்ப்புக் கிளர்ச்சி ஆகியவைகள் முடிந்தவுடன் அறிஞர் அண்ணா அவர்கள் சர்வகட்சியினர் சார்பில் விடுத்த வேண்டுகோளை, சர்வ கட்சி அமைப்பில் சேர்ந்திருந்த கட்சிகள் இதயபூர்வ மதித்து நடந்திருந்தால் இந்தித் திணிப்புப் பிரச்சினை மட்டுமல்ல, நாட்டின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் நல்லதோர் முடிவுகாண, மறுமலர்ச்சி ஏற்படக்கூடிய வழிவகை அமைந்திருக்கும்.

இன்று, தி. மு க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது அடிப்படைக் கொள்கைகளுக்கிடையே மிகவும் வேறுபட்டு நிற்கின்றன. ஏன் தி. மு. கழகத்தைக் கொள்கை அளவில் எதிர்த்துப் பேசுவதற்குப் பதிலாக சில கட்சிகள் மிக இழிவான முறையில் தாக்கிப் பேசுவதையே பழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றன. சர்வ கட்சி மேடைகளில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பேசுவதற்கு பதிலாக வேறு பிரச்சினைகளைப்பேசி சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கிடையே மனவருத்தம் ஏற்படும் நிலையும் வளர்ந்துவருகிறது. குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்ட கதை போல!

இந்தித் திணிப்புப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், அதைத்தகர்த்தெறிய வேண்டுமென்பதில் பல கட்சிகளுக்கு உண்மையிலேயே உறுதிப்பாடு இருப்பினும், ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு வழியைக் கூறுகிறது. அந்த வழி பிரிதொரு கட்சிக்கு உடன்பாடானதாக யிருக்கமுடியாது. கொசுவின் தொல்லை ஒழிய வேண்டுமானால், அவ்வப்போது அதற்கு மருந்து போட்டும், கொசு கடிக்கும்போது அதை விரட்டுவதுமாக இருப்பதைவிட கொசு உற்பத்தியாவதற்குக் காரணமாயுள்ள அசுத்தமான இடத்தைஅறவே புதுப்பிக்க அல்லது மாற்றி அமைக்கப்படுவதுதான்விவேகமாகும்.

எனவே; சர்வகட்சி மேடைகளில் இந்தித் திணிப்பை எதிர்க்கப் போய் ஒவ்வொரு கட்சியும் தத்தமது வழிவகைகளைக் கூறி ஒன்றுக்கொன்று வேறுபாட்டினை மேலும் வளர்த்துக்கொள்வதைவிட தத்தமது மேடைகளில் தங்கள் வழிவகைகளை விளக்கிக் கூறி எதிர்த்தால், பல முனைகளிலிருந்தும் இந்தி ஆதிக்கத்திற்கு வலுமிக்க எதிர்ப்பு உருவாகும்.

சர்வகட்சி அமைப்பில் எல்லாக் கட்சிகளும் ஒன்று சேரவில்லையென்றாலும், இந்தித் திணிப்பைத் தகர்த்தெறியும் வரையில் எதிர்க்கட்சிகள் ஒன்றுக்கொன்று தாக்கிக்கொள்ளும் வருந்தத்தக்க செயலை கைவிட்டாலே எல்லா எதிர்க் கட்சிகளும் சர்வகட்சி அமைப்பில் சேர்ந்திருந்தால் எந்த ஒன்றுபட்ட தன்மையை அடையமுடியுமோ அதைவிட அதிகமான தோழமையைப் பெற முடியும்.

எனவே இந்தித் திணிப்பைத் தகர்த்தெறிய சர்வ கட்சி அமைப்பில் தி. மு. கழகம் சேர விரும்பாவிட்டாலும், மற்ற எதிர்க்கட்சிகளிடம் தோழமையாகவும், இந்தி எதிர்ப்புப் பிரச்சினையைப் பொறுத்தவரை மற்ற கட்சிகளைவிட உறுதிப்பாடுடன் திட்டவட்டமான தன்மையுடன் தனது பணியினை மேற்கொள்ளும். அதுமட்டுமல்லாமல் இந்தித் திணிப்பு படையெடுத்தபோதெல்லாம், அதை முழு பலத்துடன் எதிர்த்து நின்று அதனின் ஆசாபாசத்தை மட்டப்படுத்தி வருவதிலும் தி. மு. கழகத்திற்குத்

ப: அச்சட்டம் உடனடியாக திரும்பப் பெறவேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டி வருவது தங்களுக்குத் தெரியாதோ! இடைத் தேர்தல்கள் நடைபெறவும், இந்தியைத் திணிக்கவும் முன்வந்த அரசாங்கம் அவசரச் சட்டத்தை நடைமுறையில் வைத்திருப்பது ஜனநாயகத்தை சித்திரவதை செய்வதாகும்.

ஃ

**சி. எஸ். தேவராசன், சேலம்.**

**கே: அறிஞர் அண்ணா அவர்களும், முதலமைச்சர் காமராசர் அவர்களும் ஒரே மேடையில் தோன்றிப் பேசுவதை ஏன் சில பத்திரிகைகள் மிகைப்படுத்துகின்றன, இதில் என்ன அதிசயமிருக்கிறது?**

ப: அப்பத்திரிகைகள் அரசியல் மேடைகளை நாடக மேடைகளைப்போல கருதிக்கொண்டுள்ளன போலும்!

ஃ

**டி. ஆர். சங்கரன், திண்டுக்கல்.**

**கே: ஜெமினி கணேசனுக்கு திரு அண்ணாதுரை வலை வீசுவது ஏன்?**

ப: யாருக்கும் வலைவீச வேண்டிய இழிநிலையில் தி. மு. கழகமும் அறிஞர் அண்ணாவும் இல்லையென்பதை அரசியலில் சராசரி அறிவுள்ளவர்கள் கூட அறிந்த உண்மையாகும். மற்றவர்களுக்கு வலை வீசி ஏமாற்றமடைந்தவர்கள்தான் அறிஞர் அண்ணா அவர்களை இவ்வாறு கேலி பேசுவர்.


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
**வெண்சங்கு சீயக்காய்த் தூள்**
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
**செல்வம் ராணி ஊதுபத்திகளை**
உபயோகியுங்கள்.



தயாரிப்பாளர்கள்:
**வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி**
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# சவக்குழியில் சனநாயகம்!

# சவாலுக்கழைக்கிறது சவகரின் ஆட்சி!

**மே** நாள்!

இந்த நாளை எண்ணும்போதே கோழை வீரனுகிருன்! கூனன் நிமிர்கிருன்! எழுச்சி உள்ளங் கொண்டோர் 'இது நமது விழா' என்று பாடி மகிழ்கின்றனர்!

ஏன்?

மே நாள் — அந்த முதல் நாளுக்குப் பின்னே புதையுண்டுக் கிடக்கும் மாபெரும் சமுதாயத்தின் வரலாறு—உழைக்கும் வர்க்கம் உள்ளவரை மறக்கமுடியுமா?

ஆமையாய் — ஊமையாய் அடக்கப்பட்டுக் கிடந்த பாட்டாளி வர்க்கம், படமுடியாதினித் துயரம்; பட்டதெல்லாம் போதும் என்று முழக்கிப் போர்க்கொடி உயர்த்திய திருநாள் இந்நாள்!

அன்று முதலாளித்துவத்தை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தி இரத்தச் சேற்றிலே நின்றுக் கொண்டு வெற்றிப் பண் பாடிய தொழிலாளி [illegible] [illegible]க்கத்தை நினைக்கிறோம்; பெருமையும் பூரிப்பும் கொள்கிருேம். அதே நேரத்தில் நமது சிந்தனையில் நம் அன்னை நாட்டுக்கு—உயர்ந்த கலாச்சாரத்திற்கு—பண்பாட்டுக்கு வரவிருக்கும் பேராபத்து தோன்றுகிறது.

மந்தி மொழி இந்தியால் நம் செந்தமிழுக்குத் தீமை வந்து விடுமே என்ற நினைவு எழும் போதெல்லாம் உள்ளம் துடிக்கிறது.

"அருந் தமிழே! உன்னுல் இருந்தேன்—வானேர் அமிழ்த மென்ருலும் வேண்டேன்" என்று பெருமையுடன் பேசி மகிழ்ந்த என்னருந் தமிழுக்கு ஆபத்தா?

இது நமக்கு மட்டுமல்ல— இந்தி பேசாத மாநில மக்கள் ஒவ்வொருவருக்கும் பேராபத்து எதிர்நோக்கி நிற்கிறது.

அடங்கிக் கிடக்கும் தமிழகம் இனி மேலும் முடங்கித்தான் கிடக்குமா?

அடங்கிக் கிடப்பவன் அப்படியே இருந்து விடுவதில்லை; முடங்கிக் கிடப்பவன் மூலையிலே படுத்துக் கொண்டிருந்து விடமாட்டான்; 'நமக்கென்ன' என்று இருப்போனும், 'நம்மாலாவது என்ன?' என்று பேசுவோனும் ஒரு நாள் எழுந்து நிற்பான்!

ஆணவக்காரர்களும் ஆதிக்க ஆசை படைத்தவர்களும் அவனது கேள்விகளுக்கு பதில் சொல்லியே தீரவேண்டும்! அடிமைகள், என்றும் அடிமைகளாகவே இருப்பர் என்று எவனேனும் எண்ணினுல் அவன் நிச்சயம் விவேகமற்றவனுகத்தான் இருப்பான்!

பொல்லாங்கு துடைத்திட போர்க்கொடி உயர்த்தி அடிமைச் சமுதாயம் எழுந்து விட்டால் அதனை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. குண்டுகளை உமிழும் துப்பாக்கியைக் காட்டினுலும், பீரங்கி வாயின் முன் நிறுத்தினுலும் அவன் எண்ணங்கள் சாவதில்லை!

கொண்ட கொள்கைக்காக உழைப்பதையும் — அக் கொள்கைக்காகச் சாவதையும் இன்பமெனவே எண்ணுகிருன் உண்மைத் தொண்டன்.

'இந்தி மொழியை ஏன் எதிர்க்க வேண்டும்?' என்கின்றனர் சில மேதாவிகள். இந்தியை எதிர்க்க வேண்டும் என்பது தமிழினத்தின்

**கோவை. க. இரத்தினம்**

எண்ணமல்ல; இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி ஆட்சி மொழியாவதை நாம் தடுக்கவில்லை. ஆனுல் இந்திய மொழிகளில் வளமற்ற இந்தி இந்திய ஆட்சிமொழியாகத் திணிக்கப்படுவதையே நாம் வன்மையாகக் கண்டிக்கிருேம்.

"ஒரு நாட்டு மக்களின் விடுதலை உணர்வைத் தடுத்து நிறுத்த ஆதிக்கவாதிகள் எண்ணும்போது முதலில் அவர்கள் செய்யும் வேலை அந்த நாட்டு மக்களின் மொழியைச் சிதைப்பதுதான்" என்கிருன் மேலை நாட்டு அறிஞன் ஒருவன்!

தென்னக மக்கள் இத்தனை கடுமையுடன் எதிர்த்தும் நம்மீது வேண்டுமென்றே இந்தி திணிக்கப்படுகிறது என்ருல் என்ன பொருள்? ஒரு சில இந்தி வெறியர்களின் ஆதிக்க ஆசைக்கு இத்துணைக்கண்டமே பலியாக வேண்டுமா? இதுதான் சனநாயகமா?

குடிமக்களில் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்கள் எழுப்பும் உரிமைக் குரலுக்கு செவிசாய்த்து வருவதுதான் உண்மையான குடியரசாகும். அதுவன்றி 'மெஜாரிடி' என்ற போர்வையில் புகுந்துகொண்டு சிறுபான்மையினரின் உரிமைக் குரல் வளையை நெரித்து தடுக்கும் முயற்சிக்குப் பெயர் சனநாயகமல்ல! கடைந்தெடுத்த சர்வாதிகாரம் என்று இதற்குப் பெயர்!

இந்தி திணிக்கப்படாது என்று பண்டித நேரு கொடுத்த உறுதிமொழி எங்கே? ஒருசில மொழி வெறியர்களின் பேராசைக்கு நேருவின் உறுதிமொழி பலியாக்கப் பட்டுவிட்டது என்ருல் இந்நாட்டில் நீதி எங்கே? நேர்மை எங்கே?

மக்களை மதியாத—அவர்களது உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காத எந்த ஒரு அரசும் நீடித்து நிலைத்ததில்லை. இது வரலாறு காட்டும் பாடம்!

வேண்டுமென்றே செய்யப்படும் இந்த மொழித் திணிப்பு தென்னுட்டவரை சவாலுக்கிழுப்பதாகும்! இந்தி மொழி பேசாத மக்கள் அனைவருக்கும் இது மானத்துக்குரிய பிரச்னை!

சனநாயகத்தை சவக்குழிக்கு இழுத்துச்செல்லும் இந்த முயற்சிக்கு எவர் ஆதரவு தந்தாலும் அவர் நமது முதல் எதிரி! பட்டம் பதவிக்காக சில "எச்சில் இலைக்கு அலைவோர்" நம் இனத்தையே காட்டிக்கொடுக்க முயலக்கூடும். அந்த துரோகக் கும்பலைக் காட்டி இந்தி வாலாக்கள் கீர்த்தியோ கித்தாப்போ தேடிக் கொள்ள முயல்வர். அதற்கான ஆரம்ப வேலைகளும் இப்போதே தொடங்கிவிட்டன.

இந்திக்கு அடிமையாக இருப்பவன் எவனும் தமிழ்நாட்டுக்குப் பகைவன்! தமிழுக்கு விரோதி! அன்னை மொழி காக்கப்படவேண்டும். அதற்காக நாம் என்ன விலையானுலும் கொடுக்கத் தயாராக இருப்போம்.

1937—38-ம் ஆண்டிலும், அதற்குப்பின் 1947-ம் ஆண்டிலும் இந்தியை எதிர்த்துப் போராடியவர்கள் நாம்! தியாகத் தழும் பேற்றவை நமது உடல்கள்! அந்தப் போர் வெறியும் தியாக உள்ளமும் நம்மைவிட்டு இன்னும் போய்விடவில்லை. மாருக இந்த இடைக்காலத்தில் நாம் எத்தனையோ வளர்ந்திருக்கிருேம்.

முன்னேற்றக் கழகத்தின் மூலம் தான் நமக்கு நல்வாழ்வு கிட்டும் —நமது மொழி காக்கப்படும்— என்றெல்லாம் நம்பிக்கிடக்கும் மக்கள் இந்த நாட்டிலே ஏராளம்! நமது மலர்ச்சியும், நாட்டு மக்களின் நல்வாழ்வில் நாம் கொண்டுள்ள ஆர்வமும் மக்களது மனத்தில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எந்த ஒரு பிரச்னைக்கும் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் கருத்தைத்தான் எதிர்பார்த்து நிற்கின்றனர். அதே நிலைதான் இந்திமொழி நுழைவு விஷயத்திலும் காண முடிகிறது!

மேடு-பள்ளம் நிறைந்தது இந்தியக் குடியரசு. ஆதிக்க வெறி பிடித்து அலைபவர்களால் சனநாயகம் இழுத்துச் செல்லப்படும் சமயங்களிலெல்லாம்—பாதை தவறி அது இடறி விழும்போதெல்லாம் இடித்துக் கூறத் தயங்கியதில்லை முன்னேற்றக் கழகம்! இதனை அதன் சரித்திரம் சொல்லும்!

பண்டித நேருவுக்குப் பின்னுல் மறைந்து நின்றுகொண்டு ஒரு பெரிய சதிக் கும்பல் சூழ்ச்சிவலை பின்னி வைத்திருக்கிறது. அனைத்திந்தியாவிலும் இந்தி வாலாக்களின் ஆதிக்கம் பரவவேண்டும் என்பது அவர்களது நெடுநாள் ஆசை. இந்தத் திரைமறைவு நாடகத்தில் சில 'சோற்றுப்பிண்ட'த் தமிழன்களும் பபூன் வேடம் போட்டு ஆடுகிருர்கள்.

"ஒரு இனத்தை நீ அடிமைப் படுத்த விரும்புகிருயா? அப்படியானுல் அந்த இனத்தின் மொழியைச் சிதைத்துவிடு" என்கிருன் ஒரு அறிஞன்.

மொழியை மறந்துவிட்டவனுக்கு இனப்பற்ருே, நாட்டுப் பற்ருே இருக்கமுடியாது என்பது எல்லோரும் கண்ட உண்மை: வடவரின் இந்த வஞ்சனைப் போக்குக்கு உடந்தையாக இங்கு சிலர் இருக்கிருர்கள். என்ன செய்வது?

ஆகவே இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவந்தாலும் சரி—எத்தனை பெரிய துரோகக் கும்பலை உடனழைத்து வந்தாலும் சரி— நாம் அதனை முறியடித்தே தீருவோம் என்று இந்த 'மே' நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம்!

வாழ்க மே முதல் நாள்!

---

மகிழ்ச்சிக்குரிய செய்தி!

**திராவிடன் வாசகர்களுக்கு!**

அடுத்த வாரத்திலிருந்து 'திராவிடன்' இதே அளவில் **12 பக்கங்களாகவும்** புதிய அம்சங்களுடனும் வெளிவரும். இம்முயற்சி வெற்றியுற உங்கள் அனைவரின் ஆதரவை தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிருேம்.

நிர்வாகி. திராவிடன்

# இந்தித் திணிப்பைத் தகர்த்தெறிய தி. மு. கழகம் முனைந்து நிற்கும்!


சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில்………

இரண்டு மூன்று நாட்களாக நான் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் நடத்திக் கொண்டிருந்தேன்; திடீரென எனக்குத் தொலைபேசி மூலம், இப்படி ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்படி ஒரு கூட்டத்தைத் திடீரென்று ஏற்பாடு செய்ய வேண்டிய அளவிற்கு ஒரு நெருக்கடி நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருப்பதை நாம் அனைவரும் நன்றாக உணருகிறோம்.

கருணாநிதி அவர்கள் பேசும்போது 'மொழி விஷயத்தில் தகராறு வந்தால், நாம் துக்கப்படக் கூட மாட்டோம்—ஆத்திரப் படுவோம்' என்று சொன்னார்.

உள்ளபடியே இது ஆத்திரப் படவேண்டிய பிரச்சினைதான் என்றாலும், என்னைப் பொறுத்த அளவில் நான் ஓரளவுக்குத் துக்கமாகத்தானிருக்கிறேன். ஏனென்றால், அடுக்கடுக்காக நம்மை நோக்கியுள்ள பிரச்சினைகள்—பயங்கரமான பிரச்சினைகள்—ஒன்றுக்கொன்று போட்டியிடக் கூடிய பயங்கரப் பிரச்சினைகள் வந்த வண்ணமிருக்கின்றன.



வேனா? மறு வேலைக்குப் போவேனா?—என்று எண்ணிப் புலம்பிவிட்டு, 'தோட்டத்துக் கீரையை பறித்துக்கொண்டு வந்தாவது இன்றைய சமையலை நடத்தலாம்' என்று தோட்டத்திற்குச் சென்று, கீரையைப் பறிக்கையில் அவனுடைய கரத்தைக் கருநாகம் தீண்டினால் எந்த அளவுக்கு அவன் துடிப்பானோ அந்த அளவுக்கு நாம் இன்றையத் தினம் துடிக்கின்றோம்.

எதற்கென்று நாம் போராடுவது? எதற்கென்று நாம் கிளர்ச்சி நடத்துவது? எதற்கென்று நமது மன உளைச்சலை மக்களிடத்திலே எடுத்துக் காட்டிக் கொள்வது?—என்பதைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில்—கருணாநிதி சொன்னபடி—இதிலே வீரம் கொப்பளிக்க வேண்டும் என்றாலும், உள்ளபடி நமக்குத் துக்கம்தான் பொங்கிக் கொண்டு வருகிறது.

இவ்வளவு காரியங்களையும்—ஒரு காரியத்தைக் கவனித்து முடிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பதற்குள் இன்னொரு

## அறிஞர் அண்ணாவின் முழக்கம்!

விலைவாசி ஏறியிருப்பதைக் கண்டிக்கிற வகையில், மறியல் நடத்தி சிறைச்சாலைக்குச் சென்று அந்தப் புண் ஆறுவதற்கு முன்பே வெளியில் வந்தவுடன் 'நாட்டுக்கு ஆபத்து' எனச் சொல்லத்தக்க சீனப் படையெடுப்பு ஏற்பட்டது, நம் மனம் அத்தனையும் அந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதிலே சென்றது. அந்தப் பிரச்சினையில் நம்மை நாம் ஈடுபடுத்திக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென்று பாராளுமன்றத்தில், நம்முடைய கழகத்தையே ஒழித்துக் கட்டத் தக்க தடைச்சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை எப்படிச் சமாளிப்பது என்று மறுபடியும் நம் மனதிற்கு ஒரு உளைச்சல் ஏற்பட்டு அதைப் பற்றி நாம் எண்ணிக் கொண்டிருந்தோம்; அதைப் பற்றி எண்ணி நாம் ஒரு நல்ல முடிவிற்கு வருவதற்குள் மத்திய அரசின் வரவு—செலவுத் திட்டம் வெளிவந்தது; ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய கொடுமையான வரிகளைப் போட்டார்கள்; அவைகளைக் கண்டித்து அப்படிப்பட்ட வரிக்கொடுமைகள் மக்களுக்கு ஏற்படாமல் காப்பாற்றுவதற்கான முயற்சியிலே நம்மை நாம் ஈடுபடுத்திக் கொண்டிருந்தோம்;

அந்தக்காரியம் முடிவடைவதற்குள் சென்னை சர்க்காரிலே கல்வியமைச்சராக இருக்கின்ற திரு. பக்தவத்சலம் அவர்கள்—'தமிழைப் பாட மொழியாக ஆக்க முடியாது' என்பதை அவருடைய புதிய சித்தாந்தமாக ஆக்கிக் கொண்டு—'தமிழ்ப் பாடமொழி ஆகாது' என்று அறிவித்தார். அதனால் ஏற்பட்ட மன உளைச்சலை நாம் மக்களிடத்திலே எடுத்துக் காட்டி, அதற்குப் பரிகாரம் தேட முற்பட்டோம். அத்துடன் கூட அமைச்சர் பக்தவத்சலம்—'இந்திக்குப் பரீட்சை இல்லை' என்று சொன்னவர்—திடீரென்று லால்பகதூர் சாஸ்திரி கேட்டார் என்றவுடனே, 'இந்திக்குப் பரீட்சை உண்டு' என்று அறிவித்தார்; அதைப்பற்றி மக்களிடத்திலே விளக்கவேண்டிய நிர்ப்பந்தக் கட்டம் ஏற்பட்டது.

இவைகளுக்கிடையில் தமிழகத்திலும் மற்ற பகுதிகளிலும்—புதிதாகக் கொண்டுவரப்பட்ட தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினாலே தத்தளித்துக் கொண்டிருக்கிற பொற்கொல்லர்களைப்பற்றி நாம் நம்முடைய கவனத்தைச் செலுத்தி அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும்—அவர்களுக்கு நிவாரணத்தைத் தேடவும் — அந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணவும் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தோம்.

இப்பிரச்சினையிலே நம்முடைய மனம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், மூன்று இடங்களிலே இடைத் தேர்தல்கள் வந்து, அந்த மூன்று இடங்களிலும் நாம் எப்படி கலந்து கொள்வது என நாம் யோசித்துக் கொண்டிருந்தோம்; இவைகளை நாம் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில், 'இந்தி ஆட்சிமொழி தான்' என்று அறிவிக்கின்ற சட்டத்தை, மத்திய உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, பாராளுமன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்.

அடுக்கடுக்காக, இந்த நான்கைந்து மாதத்திற்குள் நமக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த அல்லல்களையும், இந்த ஆபத்துக்களையும் ஒரு கணம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஏழை ஒருவன்—'எதற்கென்று நான் அழுவேன்; கொடுத்த கடனை திருப்பிக் கேட்கிறார்கள்; திருப்பிக் கொடுக்க வக்கில்லை; மனைவி கர்ப்பிணியாக இருக்கிறாள்; இடுப்பு வலி வேதனை தாளாமல் அவள் புலம்பிக் கொண்டிருக்கிறாள்' அவளுக்கு நான் மருத்துவம் பார்ப்பேனா? அழுகின்ற குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுப்பேனா? அல்லது இழந்துவிட்ட வேலைக்காக அழு

ஆபத்து நம்மை எதிர்நோக்கி வருகின்றது!

இப்படி அடுக்கடுக்காக ஆபத்துக்கள் நம்முடைய தமிழகத்தை நோக்கி — நம்முடைய திராவிடத்தை நோக்கி — நம்முடைய மக்களை நோக்கி வந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது, இவைகளையெல்லாம் நாம் நல்லபடி சமாளிக்க வேண்டுமானால் — இவைகளுக்கெல்லாம் ஒரு தகுந்த பரிகாரத்தைத் தேட வேண்டுமானால்—இவைகள் அத்தனைக்கும் பின்னாலே இருக்கின்ற அரசியலை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், இந்தி மொழியினுடைய வளமற்ற தன்மையைப் பற்றி மிக அழகாக விளக்கினார். ஆனால் நண்பர்களே! உங்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வேன்—

இது, மொழிப் பிரச்சினை அல்ல—இது அரசியல் ஆதிக்கப் பிரச்சினையே தவிர, மொழிப் பிரச்னை அல்ல!

எந்த மொழி நல்ல மொழி—என்று இங்கு யாரும் தேடி

# இந்தி ஆதிக்கமே

அலைந்து கொண்டிருக்கவில்லை! இந்திக்காரர்களே கூட, எங்களுடைய மொழி வளமானது என்று அவர்கள் மார் தட்டிக் கொண்டிருக்கவில்லை!

இன்னமும் வெட்கக் கேடு என்னவென்ருல், அவர்கள் வெளிப்படையாகவே, 'எங்களுடைய இந்தி மொழிக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை; அந்த வார்த்தைகளை உண்டாக்குவதற்காக நாங்கள் கமிட்டி அமைத்திருக்கிருேம்; அந்தக் கமிட்டி நாளொன்றுக்கு 400 வார்த்தைகளைக் கண்டுபிடித்துத் தருகிறது' என்றுதான் சொல்லுகிருர்களே தவிர, இந்தி மொழி ஏற்றமுள்ள மொழி இந்தி மொழி வளமுள்ள மொழி; இந்தி மொழி இலக்கியச் செறிவுள்ள மொழி' என்று அவர்கள் சொல்லவில்லை!

அவர்கள் வெளிப்படையாக மற்ருென்றும் சொல்லுகிருர்கள்— ''அரைகுறை மொழிதான் இந்தி; இலக்கணம் இல்லாத மொழிதான் இந்தி; இலக்கியம் இல்லாத மொழிதான் இந்தி; வளர்ச்சி அடையாத மொழிதான் இந்தி; ஆனுல், அந்த இந்தி எங்கள் மொழி; எங்கள் மொழி எவ்வளவு குறைவுடையதானுலும்—எங்கள் மொழி எவ்வளவு வளமற்றதானுலும், அதைத்தான் நாங்கள் உங்கள் தலையிலே திணிப்போம்; அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்; ஏனென்ருல், மொழியைப் பொறுத்தவரையில் இந்தியைவிட தமிழ் உயர்வானதாக இருக்கலாம்: ஆனுல், ஆட்களைப் பொறுத்தவரையில்—எங்களை விட நீங்கள் மட்டமானவர்கள்; இதை உணர்ந்து கொள்ளுங்கள்'' என்பதுதான் அந்தச் சட்டத்தினுடைய உட்பொருள்.

ஆகையினுல், இந்தப் பிரச்சினை மொழிப் பிரச்சினை அல்லவே அல்ல. இது மொழிப் பிரச்சினையாக இருந்தால் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய கல்வியமைச்சர் இதைக் கொண்டு வந்திருப்பார்; ஆனுல் இதைக் கொண்டு வந்திருக்கிறவர், இந்தியத் துரைத்தனத்திலே யுள்ள உள்துறை அமைச்சர்—போலீசு அமைச்சர்!

யாருடைய சுட்டுவிரல் காட்டப்பட்டால், சுடுவதற்கான போலீசுப் பட்டாளம் விரைந்து வருமோ அப்படிப்பட்ட லால்பகதூர் சாஸ்திரிதான் இதைக் கொண்டு வந்திருக்கிருரே தவிர, கல்வியமைச்சர் கொண்டு வரவில்லை. ஆகையினுல், இது கல்விப் பிரச்சினையும் அல்ல!

நாம் எந்த அளவிற்குப் பணியத் தயாராக யிருக்கிருேம் என்பதை கண்காணிப்பதற்காக, அளவிடுவதற்காக அரசியல் ஆதிக்கக்காரர்கள்—அரசியல் சூழ்ச்சிக்காரர்கள்—ஏகாதிபத்திய வெறி கொண்டவர்கள், தங்களுடைய மொழியைத் திணித்து, 'இதைத்தான் நீ ஆட்சி மொழியாகக் கொள்ளவேண்டும்; இதிலேதான் பாடங்கள் நடக்கும்; இதிலேதான் பரீட்சைகள் நடக்கும்; இதிலேதான் சட்டங்கள் இயற்றப்படும்; இந்த மொழியிலேதான் பாராளுமன்றத்திலே பேசுவார்கள்; இது தெரிந்தால் இங்கெல்லாம் வா; இது தெரியாவிட்டால் நீலகிரி தொதுவர்களைப் போல்—குருவிக்காரர்களைப் போல்—ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோக்களைப் போல் நீயும் உன்னுடைய நாட்டோடு-உன்னுடைய கூட்டோடு நீ இரண்டாந்தரக் குடிமகனுய்—மட்டரகமான மனிதனுய்—ஏனோ தானுேவாய் — எடுப்பார் கைப்பிள்ளையாய் அடங்கிக் கிட' என்பதுதான் அந்தச் சட்டத்தினுடைய உட்பொருள்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்த மொழியிலே உள்ள வேற்றுமைகளைச் சொன்னுர்.

மொழி ஆராய்ச்சியாளர்களை இந்தியத் துரைத்தனத்தார் ஒரு மாநாடு நடத்தச் சொல்லி, இன்றையத்தினம் இந்தியத் துணைக் கண்டத்திலேயுள்ள மொழிகளில், 'எந்த மொழி சிலாக்கியமான மொழி' என்று கண்டுபிடித்து, அதைப் பொதுமொழியாக ஆக்கவில்லை—அந்தக் காரியத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

உத்தரப் பிரதேசத்திலும், இராஜஸ்தானத்திலும், பீகாரிலும் மத்தியப் பிரதேசத்திலும் உள்ளவர்கள், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிருர்கள்; அதிலே—நாவலர் சொன்னபடி—பல்வேறு மாறுபாடுகள் இருக்கலாம். மாறுபாடுகள் இருந்தாலும், இந்த நான்கு மாநிலங்களிலும் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிருர்கள்.

தாய்மொழியாக இந்தியைக் கொண்டிருக்கிற இந்த நான்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தான் இந்தியத் துரைத்தனத்தை இன்றையத்தினம் ஆளுகிருர்கள்—ஆட்டிப்படைக்கிருர்கள் !

உத்தரப் பிரதேசத்திலிருந்து மட்டும் பாராளுமன்றத்திற்கு வந்திருக்கின்ற உறுப்பினர் தொகை 86; மத்தியப் பிரதேசத்திலிருந்து 40 பேர் என்று வைத்துக்கொள்ளுங்கள்—கணக்கு ஏறக்குறையத் தானிருக்கும்; இராஜஸ்தானிலிருந்து 30 பேர் என்று வைத்துக் கொள்ளுங்கள்; பீகாரிலிருந்து 30 பேர் என்று வைத்துக்கொள்ளுங்கள்—இவர்கள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து தங்கள் தாய்மொழிக்காக வாக்களித்தால், மற்ற இடங்களிலிருந்து வந்துள்ளவர்கள்—தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழி பேசும் மாநிலங்களிலிருந்து வந்துள்ளவர்கள் ஒன்ருகக் கூடினுலும் அதை எதிர்த்து நிற்கமுடியாது !

ஆகையினுல்தான், இந்தி பேசும் பகுதியினரான நான்கு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், ''நாங்கள்தான் நாட்டை ஆளத்தக்கவர்கள்; இந்த நான்கு மாநிலங்களிலும் எது தாய்மொழியாக இருக்கிறதோ அதுதான் ஆட்சி மொழியாக வேண்டும்'' என்ற அரசியல்தான்—அதன் அடிப்படையில் இருக்கிறதே தவிர—நண்பர்களே, தோழர்களே! பணிவன்போடு கூறிக்கொள்கிறேன்——தெள்ளத்தெளிய உணர்ந்து கொள்ளுங்கள் — இது மொழிப் பிரச்சினை அல்லவே அல்ல !

அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்ட நேரத்தில், 'எந்த மொழி தேசிய மொழி ஆகவேண்டும்; எந்த மொழி ஆட்சிமொழி ஆக வேண்டும் என்று விவாதிக்கப்பட்ட நேரத்தில், கோவை டி. ஏ. இராமலிங்கம் (செட்டியார்), மிக அழுத்தந்திருத்தமாக அங்கு சொன்னுர்:—

> ''இந்தியை ஆட்சிமொழியாக ஆக்கினுல் தென்னுடும்—வடநாடும் வெவ்வேறு உலகமாகிப் போய்விடும்; ஆகையினுல் அதைத்திணிக்காதீர்கள்'' என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

நீங்களெல்லாம் கேட்டால் வியப்படைவீர்கள்—நன்றி செலுத்துவீர்கள். நாவலர் நெடுஞ்செழியன் சொன்னுர்—தமிழ் ஆட்சிமொழியாக இந்தியாவிற்கே 'வந்தால், ஆறு அடியாக இருக்கிற நான், ஏழு அடியாக ஆகிவிடுவேன்' என்று. அப்படி, 'தமிழை இந்தியாவினுடைய ஆட்சிமொழியாக்க வேண்டும்' என்று ஒரே ஒருவர், அரசியல் நிர்ணய சபையில் எடுத்துச் சொன்னுர்; அவர்—அந்த நேரத்தில் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றிருந்த கோவை சுப்பிரமணியம் அல்ல—அந்த இடத்திலே, 'தமிழ்தான் ஆட்சிமொழி ஆக வேண்டும்; இந்தியாவிலேயே வளமான ஓர் மொழி — பழைமையான ஓர் மொழி—பண்பு நிறைந்த ஓர் மொழி—இலக்கியச் செறிவுள்ள ஓர் மொழி—ஆட்சிமொழியாக வேண்டுமானுல் தமிழ்தான் அதற்குத் தகுதியுடையது' என்று எடுத்துச்சொன்னவர் இப்பொழுது முஸ்லீம் லீகின் தலைவராக இருக்கும் முகம்மது இஸ்மாயில் அவர்கள் ஆவார். அவர் ஒருவர்தான் வாய் திறந்து, 'தமிழை ஆட்சிமொழியாக ஆக்குங்கள்' என்று எடுத்துச் சொன்னுர். மற்ற அத்தனை பேர்களும், தேசியத் திருவிழாக் கொண்டிருந்தார்கள் !

காஞ்சிபுரம் கருடசேர்வைக்கு வருகின்றவர்கள், கருடனையே பார்த்துக்கொண்டிருப்பார்கள்—வரதனைக்கூடப் பார்க்கமாட்டார்கள்; வழியே வருகின்ற திருடர்கள், கருடனை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்களுடைய மடியிலே இருக்கின்ற பொருள்களைப் பார்த்துக் கொள்ளுவார்கள் !

அதைப்போல், அரசியல் நிர்ணயசபை கூடிய நேரத்தில் ஒவ்வொருவரும், 'வெள்ளைக்காரனை ஓட்டிவிட்டோம் — ஏகாதிபத்தியத்தைக் கவிழ்த்து விட்டோம்—சுயராஜ்யத்தைப் பெற்றுவிட்டோம்: இனி எல்லா இலாபமும் நமக்கு; இனி எல்லாத் தொழில்களும் நமக்கு' என்று இலாபக் கணக்கைப் போட்டுக்கொண்டு, மொழியைப்பற்றி - பண்பாட்டைப் பற்றி—உரிமையைப் பற்றி—தேசியத்தைப்பற்றியெல்லாம் அக்கறையற்று அந்த இடத்திலே உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அக்கறையற்றிருந்த நேரத்தில்—பாதி மயக்கத்திலே இருந்த நேரத்தில்—'சுயராஜ்யம் கிடைத்துவிட்டது'என்ற மகிழ்ச்சிப்போதையில் இருந்த நேரத்தில்—எப்படி மணவறையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் மணமகன், மணமகள் பக்கத்தில் இருக்கிற அந்த மகிழ்ச்சியில் அவனுடைய காதிலே கட்டெறும்பு கடித்தால் அழுவதற்குப் பதிலாக அவளையே பார்த்து இளித்துக்கொண்டிருப்பானே அதைப்போல்-அரசியல் நிர்ணய சபையில் கூடியிருந்த மற்ற மாநிலத்தவர்கள், 'வெள்ளைக்காரன் ஓடுகிருன் பார்; ஓடுகிருன் பார்; என்றுதான் பார்த்துக்கொண்டிருந்தார்களே தவிர, இந்தி நுழைக்கப்படுவதை அவர்கள் பெரிதாகக் கருதவில்லை !

'அது இப்பொழுது எங்கே வரப்போகிறது; 15 வருடத்துக்குப் பிறகுதானே; அப்போது பார்த்துக்கொள்வோம்' என்ற அளவில் அவர்கள் அக்கறையற்று இருந்த நேரத்தில்— அதுவும் நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்—ஒரே ஒரு ஓட்டு வித்தியாசத்தில் இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது!

இதை நான், சனநாயகம் அறிந்த பண்டித ஜவகர்லால் நேருவுக்கு மறுபடியும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன் — தூங்குகிற நேரத்தில் கயிறு திரித்ததைப் போல்—மைனர் பிள்ளைகளிடத்தில் கையெழுத்து வாங்கியதைப் போல்—அவர்களிடத்தில் உள்ள பொருள்களைப் பறித்துக் கொண்

# ஒழிக!

# காங்கிரசாட்சியே..

டதைப்போல்—அரசியல் நிர்ணய சபையில், சுயராஜ்யம் கிடைத்த போதையிலே, இருந்த மக்களை உட்காரவைத்து, இந்தியை ஏற்றுக் கொள்ளச் செய்திருக்கிறீர்கள்—என்று !

இந்தியாவுக்கு எது பொது மொழியாக இருக்க வேண்டும் என்பதுபற்றி மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தத் தயாரா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அந்த வாக்கெடுப்பில் 'இந்திதான் இருக்கவேண்டும்' என்று தீர்மானிக்கப் படுமானால், இந்தியாவிலிருந்து திராவிடம் பிரிகிற வரையில், இந்தியை நான் ஏற்றுக்கொள்கிறேன்,

அதையும் செய்யாமல் இன்றைய தினம் 'எங்கள் மொழி கேவலமான மொழிதான்' என்று அதையும் சொல்லிக்கொண்டு அவர்கள், இன்றையத் தினம் 'இந்தியேதான் ஆட்சி மொழி' என்று மசோதா கொண்டு வருகிறார்கள்.

''1965-க்குப் பிறகு, இந்தியேதான் ஆட்சிமொழியாகும்'' என்று முதல் வாக்கியமாக அம்மசோதாவில் போட்டிருக்கிறார்கள்; அடுத்து, ஆங்கிலம், பண்டித ஜவகர்லால் சொன்னபடி இணை மொழியாக அல்ல—நாம் எதிர்பார்த்தபடி துணை மொழியாக அல்ல—'ஆங்கிலமும் இருக்கும்' என்று போட்டிருக்கிறார்கள்; ஜவகர்லால் நேரு அவர்கள், 'ஆங்கிலமும் இருக்கும்' என்றாரா? இப்படியா வாக்குறுதி கொடுத்தார் ?

இத்தனைக்கும் சில ஆண்டுகட்கு முன்னாலே, பாராளுமன்றத்தில், பிராங் அந்தோணி என்ற உறுப்பினர், எட்டாவது பிரிவிலே ஆங்கிலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று ஒரு மசோதா கொண்டு வந்த நேரத்தில், பண்டித நேரு அவர்கள், 'இதை வற்புறுத்த வேண்டாம்' என்று கேட்டுக்கொண்டு 'ஆங்கிலத்தின் அவசியத்தை உணருகிறேன்; அதன் பலனை நன்றாக உணருகிறேன், ஆங்கிலத்தை அகற்றிவிட மாட்டேன்' என்று வாக்குறுதி கொடுத்தார்.

இதற்காக நாம் கிளர்ச்சிகளைப் பலமாக நடத்திய நேரத்திலே—இப்படி 'யுத்தம்' ஆரம்பிக்கப் பட்டவுடனே — பத்திரிகைகளில் அவர்கள் விளம்பரம் போட்டார்கள்; நேருவின் படத்தைப் போட்டு, ''இந்தி திணிக்கப்பட மாட்டாது; ஆங்கிலம் இணை மொழியாக நீடிக்கும்; இந்தி பேசாத பகுதி மக்கள் தாங்களாக விரும்புகிற வரையில் நான் இந்தியைத் திணிக்கமாட்டேன்—ஒப்பம் பண்டித நேரு'' என்ற அளவில் விளம்பரம் செய்தார்கள்.

நான் இதைவைத்துக்கொண்டுதான்—பீகிங் நகரத்திலிருந்து வருகின்ற வாக்குறுதிகளுக்கும், டெல்லி நகரத்திலிருந்து வருகின்ற வாக்குறுதிகளுக்கும் வேறுபாடு இருக்க வேண்டாமா?'' என்று கேட்டேன்; உடனே பண்டித நேரு அவர்கள்—எனக்கும் நேரு பதில் சொன்னார் என்று என்னை நான் உயர்த்திக் கொள்ள விரும்பவில்லை—இப்படிப்பட்ட உணர்ச்சிகளை மதித்து—'நான் சொன்னது சொன்னதுதான்; ஆங்கிலம் நீடிக்கத்தான் போகிறது; அதற்கான மசோதா வரப்போகிறது' என்று வாக்களித்தார்.

இங்கே இருக்கின்ற தமிழ்ப் பத்திரிகைகள்கூட, 'அண்ணாதுரை அவசரப்பட்டு விட்டார்' என்றெல்லாம் எழுதின.

ஆனால் அந்த வாக்குறுதி கொடுத்த பிறகு—அதை உறுதிப் படுத்தியான பிறகு, இன்றையத் தினம் அம்மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அவசரக் கமிட்டிக் கூட்டத்தில் மசோதா விவாதிக்கப்படுகிற நேரத்தில், ஜவகர்லால் நேரு யாருக்குச் சமாதானம் சொல்லுகிறார்?—நொந்து போன உள்ளம் படைத்த நமக்கா?—தாய்மொழி தாழ்வாக்கப்பட்டு, அந்நிய மொழியான இந்தி மொழி திணிக்கப் படுவதால் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிற நமக்கு ஆறுதல் சொன்னாரா என்றால், இல்லை; இந்திக்காரர்களை உட்கார வைத்துக் கொண்டு, நீங்கள் பயப்படாதீர்கள்; 1965-க்குப் பிறகு இந்திதான் ஆட்சிமொழி; ஆங்கிலம் இருக்கும்—கொஞ்ச நாளைக்கு இருக்கும்; இப்பொழுதே தென்னாட்டில் வெகு பேர் இந்தியை வேகமாகப் படிக்கிறார்கள்; ஆகவே பயப்படாதீர்கள்' என்று அவர்களுக்குத்தான் சமாதானம் சொன்னார்.

இந்த இடத்திலேதான் இதிலே இருக்கிற அரசியலை தயவுசெய்து நீங்கள் உணரவேண்டும். மொழி ஆராய்ச்சியாளர்களின் முடிவு 'இந்தி வளமற்றது' என்பது; அரசியல் நிர்ணய சபையின் முடிவு, ஒரே ஒரு ஓட்டில் இந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பது.

ஆனால், தமிழக வரலாற்றினுடைய முடிவு என்ன? 1937ல் இருந்து இந்தித் திணிப்பை நாம் எதிர்த்து வந்திருக்கின்றோம்—இரத்தத்தைச் சிந்தி இருக்கின்றோம். இது அவ்வளவும் தெரிந்தும், நம்மை திருப்திப்படுத்த வேண்டிய —அவசியமில்லாமல், பண்டித நேரு அவர்கள், இந்திக்காரர்களை திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? அவர் இந்திக்காரரா என்றால், இல்லை; அவருடைய தாய்மொழி உருது.

இன்றையத் தினம் வெளியிலே பேசுகின்றபோது அவருக்கு உருதுவில் பேசுவதில்தான் விருப்பமும் புலமையும் நிரம்ப இருக்குமே தவிர, இந்தியிலே அல்ல!

அவர் இந்தியிலே பேசுவதை நான்கூடக் கேட்டிருக்கிறேன். இந்தியில் அவர் பேசும்போது, இந்தியிலே புலமை படைத்தவர்கள் அவரைக் கேலியாகப் பேசுவார்கள். ஏனென்றால் அவருடைய இந்தியில் 100க்கு 80 பங்கு உருது வந்து கலக்கிறது; ஆகவே இந்தி அவருடைய தாய்மொழியல்ல; ஆனால் அவர் குடியேறி இருக்கிற உ. பி.யின் தாய்மொழி; உத்தரப் பிரதேசத்தின் தாய்மொழி என்று சொல்வதைவிட, 86 பாராளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்துகின்ற மொழி என்றுதான் சொல்லவேண்டும்.

பீகாரிலிருந்து போகின்ற 30 பேர்களும், மத்தியப் பிரதேசத்திலிருந்து போகிறவர்களும் சேர்ந்து வற்புறுத்துகின்ற மொழியாக அது இருப்பதாலேயே அவர்களுக்குக் கட்டுப்படுகிறார் நேரு. இதனைத்தான் நீங்கள் கவனிக்க வேண்டும்.

இந்தக் கணக்கை மாற்றினால்தான் இந்தி ஒழியுமே தவிர—அந்த அரசியல் கணக்கும் பார்க்கப்பட்டால்தான் இந்தியின் அரசியல் ஆதிக்கம் ஒழிக்கப்பட முடியுமே தவிர'— நாவலர் நெடுஞ்செழியன் சொன்னதைப் போல், மொழியிலே உள்ள தராதரங்களை விளக்கிக் கொண்டிருந்தால் அவர்கள் அதனைக் கேட்டுக் கொள்ளத் தயாராகவும் இல்லை; அதனால் எவ்விதப் பலனும் ஏற்படப் போவதில்லை.

'உங்களுடைய தமிழைப் போல் இந்தி அவ்வளவு சிலாக்கியமான மொழி அல்ல; ஆனால், அதனை நாங்கள் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்கிறோம்' என்று ஆரம்பத்திலேயே சொல்லி விட்டுத்தான் அவர்கள் நம்மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

நான் சிறுவனாக இருந்தபோது, என்னுடைய தாய்மாமன் ஒருவர் மனைவி இறந்துவிட்ட போது—திடீரென்று வெளியூருக்குப் போனவர் வேறொரு பெண்ணோடு வீட்டுக்கு வந்தார்—நான் உபசாரத்துக்கு 'பெண்' என்று சொல்கிறேன்; உருவம் பெண்ணே தவிர, மற்றபடி அந்த அம்மையாரைப் பார்த்தால் ரொம்ப வயதானவராகக் கூட எனக்குத் தெரிந்தது—அவர் உள்ளே நுழைகையில் 'துக்கத்தில் இருக்கும் போது வேறொரு பெண்ணை அழைத்துக்கொண்டு வருகிறாரே' என்று வருந்தியபோது, அவர் சொன்னார்—நான் அழைத்துக் கொண்டு வருவது உங்களுக்குத் தாயாக இருக்க அல்ல; உங்களுக்குத் தண்ணீர் காய்ச்சிக் கொடுக்க—உங்களுக்கு முதுகு துவட்டிவிட உங்களுக்குச் சோறு சமைத்துப் போட—உங்களுக்குத் துணிமணி துவைத்துப் போடத்தான் அழைத்துக்கொண்டு வந்தேன்' என்று சொன்னார்.

அப்படித்தான் முதன் முதலில் இராஜகோபாலாச்சாரியார், இந்தி என்ற வெள்ளாட்டியை, தமிழ் நாட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தார்; இன்றையத் தினம் அந்த வெள்ளாட்டி, 'நான்தான் வீட்டுக்கு அரசி' என்று உரிமை கொண்டாடுகிறார்; ஆனால் வீட்டுக்கு அரசி விம்மிக் கொண்டிருக்கிறாள்; விம்மியழும் கண்ணீரை யார் துடைப்பது? இதிலே யாருக்குத் திறமை அதிகம்?' என்பதிலேதான் நாம் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறோம்.

வந்திருக்கின்ற ஆபத்து, அரசியல் அடிப்படை என்பதை அனைவரும் உணர வேண்டும்; எனவே அரசியலிலேதான் இதற்குப் பரிகாரம் கிடைக்கும். அரசியலிலே இதற்குப் பரிகாரம் கிடைக்க வேண்டுமானால், இந்தியா ஒன்றாக இருக்கின்ற வரையில் இந்தி பேசும் நான்கு மாநிலங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றப்படவே இயலாததாகி விடும்.

இங்கே இருக்கும் எண்ணிக்கையை நீங்கள் மாற்றலாம். இங்கே 130 பேர் காங்கிரசார்—50 பேர் நாம்; அடுத்த தேர்தலில் நாம் 130 பேர் ஆகலாம்—அவர்கள் 50 பேர் ஆகலாம்.

ஆனால், பீகாரிலிருந்து வருகின்றவர் எண்ணிக்கை இராஜஸ்தானிலிருந்து வருகின்றவர்களின் எண்ணிக்கை — மத்தியப் பிரதேசத்திலிருந்து வருகின்றவர்களின் எண்ணிக்கை — உத்தரப் பிரதேசத்திலிருந்து வருகின்றவர்களின் எண்ணிக்கை மாற்றப்பட முடியாததாகும்.

'இங்கெல்லாம் வேறு கட்சி வராதா?' என்று கேட்டால் வர

# விலகிச் செல்!

# அரசியல் நாணயமிருந்தால் இந்திப் பிரச்சினை மீது வாக்கெடுப்பு நடத்துக!

லாம்; ஆனுல் வருகின்ற கட்சிகளும், காங்கிரசைவிட இந்தி விஷயத்திலே வெறி பிடித்த கட்சிகள்தான்.

இன்றையத் தினம் காங்கிரசைக் கழுத்துப் பிடியாக பிடித்துக் கொண்டிருப்பது டாக்டர் ராம் மனேகர் லோகியாவின் சோஷலிஸ்டுக் கட்சி; அது இந்தியைப் புகுத்தவேண்டும் என்பதில் தீவிரம் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் — அழிக்க வேண்டும் என்பதிலே தீவிரம் கொண்டிருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக வளர்ந்து கொண்டு வருவது ஜனசங்கம்; அக்கட்சியும், இந்தி புகுத்தப்பட வேண்டும்—ஆங்கிலம் அகற்றப்பட வேண்டும்' என்ற வெறி உணர்ச்சி கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட கட்சி அது.

ஆகையினுல், அந்தக் காலி இடங்களில் வேறு கட்சிகள் வெற்றி பெற்ருலும் நிச்சயமாக மாறுதல் ஏற்படாது.

சேர்ந்தவர்கள்—நம்முடைய கட்சியை சேர்ந்தவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து பண்டித ஜவகர்லால் நேருவிடம் ஒரு மனு கொடுத்ததாக இப்பொழுதுதான் பத்திரிகையில் பார்த்தேன். எத்தனைப் பேர் அதில் கையெழுத்திட்டார்கள் என்பதைச் சொன்னுல், வெட்கக் கேடு. பதினைந்து பேர்தான் அதிலே கையெழுத்துப் போட்டிருக்கிருர்கள்.

ஆட்சிமொழி மசோதாவைக் கண்டித்துப் பண்டித ஜவகர்லால் நேருவிடத்தில், கையொப்பமிட்டு கொடுக்கப்பட்டிருக்கிற மனுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த 8 பேர் உட்பட சுதந்திராக் கட்சியில் இரண்டொருவர் சேர்ந்து பிராங் அந்தோணியும் சேர்ந்து, இன்னும் இரண்டொரு சுயேச்சைகளும் சேர்ந்து 15 பேர் கையெழுத்துக் கொடுத்திருக்கிருர்கள். நாமே இதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

15 பேர் மட்டும் மசோதா வேண்டாமென்று சொல்லிவிட்டு வருகிறேன்' என்று சொன்னுராம் பின், தன்னுடைய பார்வையாலேயே நேருவைப் பார்த்து, எனக்கு இங்கு வேலை கொடுத்ததற்குத் திருப்தியாக இருக்கிறதா? என்று கேட்டிருக்கக் கூடும்!

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்களைப் பார்த்து, 'இதற்கு ஏன் பயப்படுகிறீர்கள்? இன்னும் 10 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் இருக்கும். பயப்படாதீர்கள்' என்று அவர் தம்முடைய ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லுகிருரோ, அல்லது தமிழ்நாட்டு ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லுகிருரோ, அது எனக்குப் புரியவில்லை—சொன்னுராம்; அவரும், பார்வையாலே நேரு பண்டிதரைப் பார்த்து, இவ்வளவு நல்ல வேலை செய்கிற என்னை, நீங்கள் இலாகா இல்லாத மந்திரியாக ஆக்கினீர்களே, இது நியாயமா? என்று கேட்டிருக்கக் கூடும்.

அதற்குப் பிறகு காங்கிரசு உறுப்பினர்களுக்குப் பண்டித வலிவுள்ளவனுக்கி வைத்திருக்கிறீர்கள்? எந்த வலிவைக் கொண்டு இதை தடுத்து நிறுத்திவிட முடியும் என்று கருதுகிறீர்கள் ?

இந்தியாவிலே ஓர் அங்கம் நாம்—பாராளுமன்றத்திலே எட்டுப் பேர் உறுப்பினர்கள் நாம். இந்த நிலையில், நம்மை வைத்துக் கொண்டு, 'இதனை விடாதே, விடாதே' என்ருல் நம்முடைய நண்பர்களிலே சில பேர்கூட, இதை எப்படியாவது எதிர்த்து ஒழித்தாக வேண்டும் என்று சொல்லுகின்றபோது நான் ஒன்று உங்களுக்குச் சொல்லுவேன்.

இந்தியை ஒழிக்க வேண்டுமானுல், இந்தியைத் திணிக்கின்ற காங்கிரசு ஆட்சியை ஒழிக்கவேண்டும்; காங்கிரசு ஆட்சி இருக்கின்ற வரையில் இங்கிருந்து காங்கிரசு உறுப்பினர்களே போகின்றவரையில்—அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கிக் கை தூக்கிக்கொண்டு இருக்கின்ற வரையில், நமக்கு

## இடைத்தேர்தல்களில் காங்கிரசின் ஆணவத்தை வீழ்த்துங்கள் !

இன்னமும் சொல்லப்போனுல், இப்பொழுது நேரு பண்டிதர் ஆங்கிலம் இருக்கட்டும் என்று சொல்லுகிருரே—அதை அவர்கள் ஆட்சிக்கு வருவார்களே யானுல், ஆங்கிலம் இருந்த வரையில் போதும்; அதை அகற்றி விடுங்கள் என்றுதான் தீர்மானிப்பார்கள்.

ஆகையினுல் ஆபத்து இன்ருேடு இல்லை: ஆபத்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் அந்த ஆபத்து மிகப் பயங்கரமானதாக இருக்கும்.

ஆகையினுல் தமிழ்நாட்டு அரசியலில் அக்கறை கொண்டவர்களை நான் பணிவன்போடு கேட்கிறேன்—இந்த அரசியல் நிறைய ஆக்குவதற்கு நீங்கள் எந்த வழியைக் காட்டுகிறீர்கள்?

நாங்கள் இதைச் சொல்லுகிருேம்—'நாடு பிரிய வேண்டும் என்ற வழியைச் சொல்லுகிருேம். சே, சே! அது கூடாது; உனக்கு இந்தி ஆதிக்கம்தானே கூடாது—தடுத்து நிறுத்துகிருேம்; உனக்குப் பொருளாதார சமநெறிதானே வேண்டும்—அதை ஏற்படுத்துகிருேம் என்று என்னிடத்திலே வாதாடுகின்ற அரசியல் மாபெரும் தலைவர்களை—பிற கட்சிகளிலே இருக்கின்ற மேதைகளைக் கேட்கிறேன்—உங்கள் அத்தனைப் பேர்களாலும் இன்றையத் தினம் இந்தி ஆதிக்கம் வருவதைத் தடுத்து நிறுத்தமுடிகிறதா என்று.

நான் பேசிக் கொண்டிருக்கிற இதே நேரத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள்— எதிர்க்கட்சியை மீதியுள்ளவர்கள் வேண்டுமென்று சொன்னுல் நேரு என்ன செய்ய முடியும்? நேருவின் மனதிலே என்ன எண்ணம் ஏற்படும்?— 'ஓகோ, நாம்தான் அவசரப்பட்டு வாக்குறுதி கொடுத்துவிட்டோம்; நிலைமை அப்படியில்லை போலிருக்கிறது' என்றுதான் கருதுவார்.

இங்கிருந்து செல்லுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியாக இருக்கிற பொழுது 'இது ரொம்ப அக்கிரமம்; இது ரொம்ப அநீதி; இதை இப்படியே விட்டுவிடக் கூடாது. என்கிருர்கள்.

இன்னமும் சொல்லப் போனுல் நம்முடைய தொடையைக் கிள்ளிச் சொல்லுகிருர்கள். 'விடாதே' என்கிருர்கள்; ஆனுல், அவர்கள் தயாரா என்ருல் இல்லை.

நான்கு நாட்களுக்கு முன் நடைபெற்ற காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் ஆட்சிமொழி பற்றி நடைபெற்ற விவாதத்தின்போது, தமிழ்நாட்டிலிருந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், 'இது கூடாது; அக்கிரமம்தான்' என்று கூறினராம். பின், இரும்பு அமைச்சர் சுப்பிரமணியம் சே! சே! உங்களுக்கு விஷயமே புரியவில்லையே; இது 'அபிஷியல் லாங்குவேஜ் பில்' என்று இல்லை; 'அபிஷியல் லாங்குவேஜஸ்' என்று பன்மையிலே போட்டிருக்கிறது. இரண்டு மொழியையும் ஏற்றுக் கொள்வதாகப் பொருள்; ஆகையினுலே ஏற்றுக் கொள்ளுங்கள்; இதற்குத் தடை சொல்லாதீர்கள்; நான் இதற்கிடையில் பெர்லின் நகருக்கும் போய்விட்டு

நேரு ஒரு உபதேசம் செய்திருக்கிருர், 'எவ்வளவு கருத்து வேறுபாடு இருக்கிறதோ அவ்வளவையும் சொல்லுங்கள்; அதற்கு உங்களுக்குத் தாராளமாக அனுமதி தருகிறேன்; ஏனென்ருல் நாம் எல்லாம் சனநாயக வாதிகளல்லவா? மனதில் அடக்கி வைக்காதீர்கள்; எல்லாவற்றையும் கொட்டுங்கள்; ஆனுல் 23-ந் தேதி, இந்தச் சட்டம் வருகிற போது மட்டும் நான் சொல்லுகிறபடிதான் ஓட்டுப் போட வேண்டும் என்பதாகக் கூறியிருக்கிருர்!

ஆக நண்பர்களே! 23ந் தேதி பாராளுமன்றத்துக்கு இம்மசோதா வருகிறது; வருகிற நேரத்தில் நம்முடைய கழகத் தோழர்கள்தான் எதிர்த்து வாக்களிப்பார்களே தவிர, நம்முடைய கழகத் தோழர்கள்தான் எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்புவார்களே தவிர, இங்கிருந்து சென்றிருக்கின்ற காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி, மனதிலே தோன்றுகின்ற எண்ணத்திற்குத் திரையிட்டுக் கொண்டு அவர்கள் கையொப்பமிட இருக்கிருர்கள்—கை தூக்க இருக்கிருர்கள்—அதற்குப் பின்னர், தமிழகத்திற்குள்ளே தமிழர்கள் என்று உலாவுவதற்கும் இருக்கிருர்கள் என்பதை நண்குணர வேண்டுகிறேன்.

நம்முடைய நண்பர்கள் எல்லாம் என்னிடம் சொன்னுர்கள்—நடராசன்கூட நேற்றே சொன்னுர்—'அண்ணு' இதை விடக் கூடாது என்று.

உங்களை நான் கேட்கிறேன்—நீங்கள் என்னை எந்த அளவில் ஓட்டு எண்ணிக்கை எங்கிருந்து கிடைக்கும் ?

எட்டுப் பேர் மட்டும் கை தூக்கினுல், மிச்சமிருக்கிற நானூற்றுச் சொச்சம் மேர் அந்தப் பக்கத்திலே இருக்கிறபொழுது, எப்படி நம் பக்கத்தில் நியாயம் கிடைக்கும் ?

ஆகையினுல், கொண்டு வருகின்ற இச்சட்டத்தை மிருகத்தனமான மெஜாரிட்டி பலத்தாலே அவர்கள் நிறைவேற்றுகிருர்கள் என்று வைத்துக் கொண்டாலும் ஒன்று நான் சொல்லுவேன் தமிழ்நாட்டு மக்களுக்கு—

**இப்பொழுது நடைபெற இருக்கின்ற மூன்று இடைத் தேர்தல்களிலும் நீங்கள் காங்கிரசை முறியடித்துக் காட்டுவீர்களேயானுல் — காங்கிரசு தோற்கடிக்கப்பட்டது என்ற ஒரு வெற்றியை நீங்கள் அடையாளமாகக் காட்டி அதை என்னுடைய கையில் கொடுத்தீர்களே யானுல் நேருவிடத்திலே அதனைக் காட்டி, 'நீங்கள் இந்தியைத் திணித்தீர்கள்; இதோ பாருங்கள் பரிசு' என்று காட்டுவேன். ஆனுல், எங்கே நீங்கள் என்னை அந்த விதத்திலே வாழ விட்டிருக்கிறீர்கள்?**

ஆகையினுல் நண்பர்களே ! வேதனையோடு பேசுகிறேன்—நொந்த உள்ளத்தோடு பேசுகிறேன்—'எதிர்க்க வேண்டும்' என்ற அறிவு இருக்கிறது; எதிர்த்துத் தளிப்பட்ட முறையில், எந்த விதத் தியாகமும் செய்ய எங்களில் யாரும் பின்வாங்குகிறவர்கள் அல்ல! எங்களுக்கு யாரும் விரத்தைப் போதிக்கத் தேவையில்லை!

# 'இந்தி'யும் அந்நிய மொழிதான்!

எங்களுடைய மீசையை வேறு யாரும் முறுக்கிவிடத் தேவையில்லை! ஆனால் உங்களுக்குப் பணிவன்புடன் சொல்லிக் கொள்வேன்—அரசியலில் மாற்றம் ஏற்பட்டாலன்றி மொழி விஷயத்திலே எப்படி மாற்றம் ஏற்பட்டுவிட முடியும்?

10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆங்கிலம் அகற்றப்படும் என்று இன்றையத் தினம் வருகின்ற இந்தி மசோதா சட்டமாக்கப் படுகின்ற நேரத்தில், கூடுமானவரையில், பாராளுமன்றத்தில் நம்முடைய தோழர்கள் குரல் எழுப்புவார்கள்!

யாரோ ஒரு நண்பர் கேட்டாராம்—'பாராளுமன்றத்தில் இவர்களெல்லாம் கூச்சலிட்டு இருக்க வேண்டாமா?' என்று.

இருக்கலாம். கூச்சல் மட்டும் போடத் தெரிந்தவர்கள் கூச்சலிட்டுக் கொண்டே இருக்கலாம்.

ஆனால், எங்களுடைய உறுப்பினர்கள் விஷய விளக்கங்களை அளிப்பதற்கு இருக்கின்றார்கள்.

நீங்கள் குத்துச்சண்டை பார்த்திருப்பீர்கள்; கோதாவில் இரண்டு பேர் குத்திக் கொள்கிற போது, காலரியில் உட்கார்ந்து கொண்டு இருப்பவர், 'அந்தப் பக்கம் போடு இந்தப் பக்கம் போடு' என்பார். போடுகிறவன் வேறு—வாங்குகிறவன் வேறு; ஆனால் உட்கார்ந்து கொண்டிருப்பவனே 'அந்தப் பக்கத்திலே போடு' என்பான்; திரும்பி வருபவன் சொல்லுவான் 'சே, சே! சரியாக குத்து விழவில்லை' என்று; உட்கார்ந்திருப்பவன், 'நானாக இருந்தால்......?' என்பான்; 'நீ போவதுதானே என்றால், 'என்னைத்தான் சேர்க்கவில்லையே' என்பான்.

அந்த விதத்திலே பேசுகிறவர்களைப் பற்றிக் கிஞ்சித்தும் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

**இதிலே மீசை முறுக்குவதானாலும் சிறைச்சாலைக்குச் செல்வதாக ஆனாலும், தியாகத் தழும்பு ஏற்பதாக ஆனாலும், அரசியல் நிலைகளை மாற்றுவதாக ஆனாலும், நம்மால் எந்த அளவு முடிகிறதோ அதுதான் தமிழ் நாட்டுக்கே தவிர, வேறு யார் யாரோ சேர்ந்து, எதை எதையோ சாதித்து விடுவார்கள் என்று தப்புக்கணக்குப் போடாதீர்கள்!**

50 சட்டமன்ற உறுப்பினர்களையும், 8 பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட நம்மாலேயே முடியாது என்றால், நான் இருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா? என்று பேசிக் கொண்டிருக்கிற அரசியல் கட்சிகளைப் பற்றி நாம் இன்றையத் தினம் கவலைப்படத் தேவையில்லை.

நான் உங்களைக் கேட்க வந்திருப்பது, இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்து எடுக்கப்படும் முயற்சியில் உங்களுடைய பங்கு எந்த அளவுக்கு இருக்கும்? நீங்கள் எந்த வகையில் காணிக்கை செலுத்த இருக்கிறீர்கள்? நீங்கள் எதைக் காணிக்கையாகச் செலுத்த விரும்புகிறீர்கள்?—என்பதை நீங்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

என்னைப் பொறுத்தமட்டில் நான் திடமாகக் கருதுகிறேன்—அரசியல் நிலைமை மாறினால் அன்றி, மாற்றப்பட்டால் அன்றி இந்தி ஆதிக்கத்தைத் தனியாக நாம் அறுத்துவிட முடியாது.

உடலிலே சிரங்கு ஏற்பட்டு விட்டால், அது வரையிலே சீவித்தள்ளி சிரங்கைப் போக்கடிக்க முடியாது. உள்ளுக்கு மருந்து சாப்பிட்டு கொதிப்பு அடங்கி, பூச்சிப் புழுக்கள் எல்லாம் உள்ளே சாகடிக்கப்பட்டு, அதற்குப் பிறகுதான் சிரங்கு வராமல் தடுக்க முடியுமே தவிர, வந்தவுடனேயே பேனா கத்தியை எடுத்துச் சீவினால் அவன் மருத்துவனும் அல்ல—மதி உள்ளவனும் அல்ல!

இப்பொழுது வந்திருக்கின்ற இந்தி, உடலிலே வந்திருக்கிற பிளவு நோயைப் போன்றது அல்லது சிரங்கைப் போன்றது என்று வைத்துக்கொண்டால், இதற்குக் காரணம், உள்ளே இருக்கிற வெப்பம்—அரசியல் சட்டம்—அப்படி இருக்கிறது என்று பொருள்!

அரசியல் சட்டத்தில் அப்படிப்பட்ட அதிகாரத்தை நாம் கொடுத்து விட்டிருக்கிறோம்; ஆகையினால்தான் அது மாற்றப்பட வேண்டும் என்பதில் தி. மு. கழகம் மிகுந்த அக்கறை காட்டுகிறது!

இந்த நேரத்தில் இன்னொன்றும் நான் சொல்லுவேன்; தமிழ் நாட்டிலே எந்தப் பிரச்சினை வந்தாலும் பொதுமக்கள் நம்மைப் பார்த்துத்தான், இதுபற்றி உங்களுடைய கருத்து என்ன? என்று கேட்கிறார்கள்!

'விலைவாசி ஏறுகிறதே, முன்னேற்றக் கழகத் தோழர்களே, என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள்!

புதிய வரிகளைப் போட்டு விட்டார்களே; அது ஏழைமக்களை, வாட்டுகிறதே; இதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள்!

'பாடமொழியாக தமிழ் இல்லையாமே; இந்த அநீதியைத் துடைக்க முன்னேற்றக் கழகத் தோழர்களே, நீங்கள் என்ன பரிகாரம் வைத்திருக்கிறீர்கள்?' என்று நம்மைப் பார்த்துக் கேட்கின்றார்கள்.

இந்திக்குப் பரீட்சை வைத்து விட்டாரே பக்தவத்சலம் அதற்கு என்ன பரிகாரம் வைத்திருக்கிறீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

இவ்வளவையும் கேட்டுவிட்டு உங்களை ஒழிக்கச் சட்டம் வருகிறதாமே; அதற்கு என்ன செய்யப் போகின்றீர்கள்? என்று கேட்கிறார்கள்.

இந்த நேரத்தில், நடுநிலைமையிலுள்ள அரசியல் வாதிகளைப் பார்த்து சிந்திக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கொண்டு வரவிருக்கிற தடைச் சட்டத்தின்படி எங்களை ஒழித்துக் கட்டிவிட்டால், உங்களுக்காக மாரடித்து அழுவதற்காகவாவது தமிழ்நாட்டில் ஆட்கள் இருக்கின்றார்களா என்பதை தயவுசெய்து எண்ணிப் பாருங்கள்!

இப்பொழுது இந்தி வந்தது—கேட்பதற்கு இங்கே நாதி எங்கே இருக்கிறது?

பாராளுமன்றத்திலானாலும், சட்டமன்றத்தினாலும் சரி—வெட்டவெளிக் கூட்டத்திலானாலும் சரி—ஒரு மறியலை நடத்துகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்; ஒப்புக்கு—உதாரணத்திற்கு அப்படி மறியலை நடத்துவதானாலும், அதற்குத் தொண்டர்கள் தேவை என்றால், எந்தப் பாசறையிலிருந்து உங்களுக்குக் கிடைப்பார்கள்?

இப்படி இருக்கின்ற இந்தப் பாசறையை, ஒரு தடைச் சட்டத்தினாலே, ஒழித்துவிடப் போகிறார்கள் என்று மகிழ்ச்சியடைகின்ற காங்கிரசுக்காரர்கள், 'அந்தப் பாசறையைக் கலைத்துவிட வேண்டும் என்று எண்ணுகிற பிற கட்சித் தோழர்கள், 'அழிந்தால் என்ன பரவாயில்லை' என்று எண்ணிக் கொண்டிருக்கிற விவரம் அறியாத அரசியல் கட்சிக்காரர்கள் ஆகியோரைக் கேட்கிறேன் இது அழிக்கப்பட்டுப் போய் விட்டால் இந்த அளவுக்கு வளர்ச்சியடைந்து—இந்த அளவுக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பி--இந்த அளவுக்குச் சட்டங்கள் வருமானால் அதைத் தடுக்க தங்களால் ஆன ஆற்றலைக் காட்டத் தக்க வேறு கட்சி எங்கே இருக்கிறது?

'நாங்கள் இல்லையா?' என்று கம்யூனிஸ்டுகள் கேட்கலாம்; இருக்கிறீர்கள் நண்பர்களே இருக்கிறீர்கள்; பாதிப் பேர் வெளியிலேயும், பாதிப்பேர் உள்ளேயும் இருக்கிறீர்கள்; வெளியே இருக்கின்றவர்களிலே உதட்டிலே ஒன்றும், உள்ளத்திலே ஒன்றுமாக இருப்பதாக உங்கள் முகாமிலேயே பேசுகிறார்கள்!

இருக்கிறீர்கள், இல்லை! என்று நான் சொல்லவில்லை; ஆனால் நீங்கள், அனைத்து இந்தியத் தத்துவத்திற்கு உங்களை ஆட்படுத்திக் கொண்டிருப்பவர்கள்! நீங்கள் எப்படி இந்தியை எதிர்த்துத் தமிழைப் பாதுகாப்பீர்கள்!

நீங்கள் எப்பொழுது அனைத்து இந்தியக் கட்சியோ, அதனால் உங்களை நம்புவதில் பயனில்லை!

அதற்கு அடுத்தபடியாக சோசலிஸ்டுகள், பிரஜா சோசலிஸ்டுகள் இருக்கிறார்கள்.

'சிவஞான கிராமணி இருக்கிறாரே' என்று சிலர் சொல்லலாம் எனக்குக்கூட அவர் விஷயத்திலே நிறைய அன்பும் அக்கறையும் உண்டு.

இன்றையத் தினம்தான் பத்திரிகையில் அவரைப்பற்றிப் பார்த்தேன்; அவருக்கு வயிறெல்லாம் புண்ணாகிப் போயிருக்கிறதாம், அவரே பேசியிருக்கிறார் — 'இந்தியை எதிர்க்கின்றவர்கள், ஆங்கிலத்தை எதிர்க்கவில்லையே என்பதைப்பார்க்கின்றபோது, விழுந்து விழுந்து சிரித்து தன்னுடைய வயிறெல்லாம் புண்ணாகிப் போய் விட்டது' என்று.

முதலில் அவருடைய புண்ணுக்கு மருந்து தேடிக்கொள்ள வேண்டி யிருக்கிறது; ஆகவே அவரையும் இதில் நம்புவதற்கில்லை!

அடுத்தபடியாக நம் தம்பி இருக்கிறான்; இதை அவன் எதிர்ப்பானா என்றால் இல்லை; என் பின்னாலே வந்து, என்னைத் தள்ளுகிறான்—'போ, விடாதே!' என்று. இந்த வேலையிலேதான் இருக்கிறான்.

ஆனால் நல்ல யோசனைகளைச் சொல்லுகிறான்—அதுவும் தமிழ் நாட்டில் அது ஒன்றுதான் குறைவு என்று எண்ணிக்கொண்டு!

# ஆதிக்கத்துக்கு அடிபணியோம்!

# டெல்லிப் பிடிப்பிலிருந்து விடுபடுவதே சிறந்த வழி!

என்ன அந்த யோசனைகள்?—'இதை இப்படிச் செய்திருக்கலாமே? நீங்கள் இப்படிப் போயிருக்கலாமே?'—என்று சொல்லியிருக்கிருன்.

சரி, அப்படிச் சொல்லுகிருனே தம்பியாயிற்றே; அதுவும் என் ஆசைக்குரிய தம்பியாயிற்றே--என்பதாலே, செய்யலாமே என்று செய்து முடித்த பிறகு, 'பாராளுமன்றத்தில் இவர்கள் ஏன் சும்மாயிருந்தார்கள்? கூச்சலிட்டு வெளியில் வரவேண்டாமா? என்று கேட்டதற்காகக் கூச்சலிட்டால் உடனே, அடுத்த கூட்டத்திலே என்ன கூறக்கூடும்? 'பாராளுமன்றத்தின் பாரம்பரியம் தெரியாமல் இவர்களெல்லாம் அங்கு போய் படுகாலித்தனமாக நடந்துகொண்டார்களே; நான் இருந்திருந்தால் அப்படியா நடக்கும்? நான் எழுந்து நின்று நியாயமாக வாதாடியிருப்பேன்; இப்படியா காலித்தனமாக நடந்திருப்பேன்? ஐயகோ, ஐயகோ! என்னை அனுப்பாமல் போய்விட்டீர்களே' என்று பேசக்கூடும்.

ஆகையினுல், நாம் செய்ய வேண்டிய காரியத்திற்கு வேறு யார் சொல்லுகின்ற ஆருடமும் நமக்குத் தேவையில்லை!

நாம் எந்த அளவுக்குத் தயார் என்று துவக்கத்தில் சொன்னேனே அத்தனை அல்லல்கள் நமக்கு வருகின்றன. அதனை நீங்கள் வரிசை எண்களாகப் போட்டுக் கொள்ள வேண்டும். அட்டவணை போட்டுக்கொள்ள வேண்டும்--ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று!

முதலில் இதைக் கவனிப்போம் பிறகு இதைக் கவனிப்போம் என்று அட்டவணை போட்டுக் கொண்டு நீங்கள் வேலை செய்தால், ஓரளவுக்கு நமக்குப் பயன் கிடைக்கும்.

அதிகப் பேராசை பிடித்தவன் சில வேளைகளில் இரயில் பிரயாணம் செய்கையில், வண்டி நிற்கின்றபோது வெளியில் சுண்டல் கடை வைத்திருக்கிறவனிடத்தில் ஓர் அணு கொடுத்து கடலை வாங்குவான்; இரண்டு கையையும் நீட்டி, 'நிரம்பப் போடு' என்றுகேட்பான்; போட்டு ஆன பிறகுதான் தெரியும்--அவன், கையை நீட்டியிருப்பது சன்னல் கம்பிக்குப் பக்கத்தில் என்பது! வாங்கிறவரை வாங்கிக் கொண்டால் கையை வெளியில் எடுக்கவேண்டுமல்லவா? கைகள் கம்பிக்கு நடுவே அகப்பட்டுக் கொண்டிருக்கும்; கையை இப்படி அப்படி இழுத்தால் கையிலுள்ள சுண்டல் சிதறிவிடும்; அதனுல் விழித்துக் கொண்டே இருப்பான்!

அதைப்போல், ஏக காலத்தில் 'எல்லாவற்றையும் எதிர்ப்போம்; தடைச்சட்டமா--இந்தக் கையாலேயே எதிர்ப்போம்; பாடமொழி திட்டமா--இந்தக் கையால் எதிர்ப்போம்; இந்திப் பரீட்சையா? பக்கத்திலிருக்கும் கருணாநிதியின் கையை இரவல் வாங்குக' என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போனுல் ஒன்றும் நடக்காது.

ஆனுல் செய்வது ஒன்ருக இருக்கவேண்டும்; அது நன்ருக இருக்கவேண்டும்; அதை இன்றே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி தேர்ந்தெடுத்துக் கொள்கின்ற அந்த முறைப்படி நீங்கள் எனக்கு ஆணையிடுவீர்களானுல், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்பு என்ற காரியத்தில் தன்னுடைய முழு மூச்சோடு ஈடுபடத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த இடத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கிடையில் நீங்கள், 'விலைவாசி ஏறுகிறதே' என்ருல்-ஏறும் இந்த நேரத்தில் அதனைக் கவனிப்பதற்கில்லை; 'பாடமொழி தமிழாக இல்லையே' என்ருல்--அதை இப்போது கவனிப்பதற்கில்லை.

எல்லாவற்றிற்கும் சேர்த்து 'சர்வரோக நிவாரணி' ஒரு அரசியல் கட்சியினிடத்தில் இல்லை அது, ஆலமர ஜோசியரிடத்தில் தான் கிடைக்கும்; ஒரு குளிகை கட்டுகிறேன் பாருங்கள்; போன பொருள் திரும்பி வரும்: பெண்டாட்டிக்கு இரட்டைப் பிள்ளை பிறக்கும், உங்களுக்கு வேலை கிடைக்கும், முக்கால் அணுதான் என்பான்.

அது போன்றது அல்ல அரசியல்! அதனுல்தான், அரசியலில் அடுக்கடுக்காக வந்திருக்கும் இந்த அல்லலில்--இந்த ஆபத்துக்களில் மிகப் பயங்கரமானது.

என்று தோன்றுகின்ற மிகப் பயங்கரமாக உள்ளபடியே இருக்கின்ற இந்த இந்தித் திணிப்பு விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டி இதைத் தமிழகம் முழுவதையும் ஒன்று திரட்டுகின்ற காரியத்தில் நாம் ஈடுபட வேண்டும்.

ஆட்சிமொழி மசோதா சட்டம் ஆக்கப்பட்ட பிறகு, அதற்குப் பிறகு ஏற்படுகிற நிலைமைகளைப் பற்றி பின்னுலே உங்களிடத்திலே பேசுகிறேன் என்று சொல்லி, இன்றையத்தினம் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருப்பதற்கு என்னுடைய வன்மையான கண்டனத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டு, இந்த முயற்சிக்குத் தி. மு. கழகம் கடைசிவரையில் எதிர்ப்பாகத் தான் இருக்கும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

O

சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பில் 18-4-63 அன்று மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் இந்தி எதிர்ப்பு மாபெருங் கூட்டம் நடைபெற்றது. செயலாளர் நீலநாராயணன் முன்மொழிய, பொருளாளர் டி. கே. கபாலி எம். சி. வழிமொழிய கழகப் பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதி எம்.எல்.எ., தலைமை வகித்து 1937ம் ஆண்டு மூதல் இன்று வரை இந்தி ஆதிக்க வெறியர்கள் செய்துவரும் அநீதியை விளக்கியதுடன், இந்தித் திணிப்பு பெருங்கொடுமைக்குச் சமமாகும் என்று கூறினுர்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், இந்தியாவுக்கு சீன ஆக்கிரமிப்பாளர்கள் செய்த நய வஞ்சகத்தை விட, இந்தி ஆதிக்க வெறியர்கள் இந்த நெருக்கடியான நேரத்தில் தென்னக மக்கள் மீது இந்தியைத்திணிக்க முனைவது சகிக்க முடியாத கொடுமையாகும் என்று குறிப்பிட்டார்.

சட்டமன்ற தி. மு. க. எதிர்க் கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், மொழிவளமற்ற இந்தியை இந்தி பேசும் மக்கள் தங்கள் மாநில ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளலாமே தவிர இந்தி பேசாத மாநிலங்களுக்கும் சேர்த்து இந்தியாவின் ஆட்சிமொழி என்று சட்டமியற்றுவது நடைமுறைக்கு நிற்கக் கூடியதல்ல, அதை தென்னுட்டு மக்கள் என்றும் ஏற்கமுடியாது என்று குறிப்பிட்டார்.

இறுதியாக அறிஞர் அண்ணு அவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து ஆணித்தரமான தமது வாதத்தை — அரிய கருத்தை மக்கள் மன்றத்தின் முன் வைத்தார்கள்.

## சீச்சீ! போ போ!

---(—∘°∘—)---

பத்தாண்டு சென்ருலும் சரியே; உன்னைப்
பாராள விடமாட்டோ மினியே! எங்கள்
சத்தான தமிழ்மொழியின் நூல்போல் உந்தன்
சரித்திரத்தி லெங்கேனு முண்டோ, இல்லை!
முத்தான நன்னூலைப் போன்ருேர் மூத்த
மொழிநூல்தா னுன்னிடத்தி லுண்டோ, கூறேன்!
பித்தான வடமொழியே! இந்திப் பேயே!
பேச்சேனே உன்னிடத்தில், சீச்சீ போபோ!

செங்கரும்பின் தமிழ்ச்சுவையைப் பெற்ற துண்டோ!
சிலம்புண்டோ! கைவளைதா னுண்டோ! காதில்
மங்கலநற் குண்டலந்தா னுண்டோ! மார்பில்
மேகலைசேர் பொற்சிந்தா மணிதா னுண்டோ!
தங்கநிக ரெண்தோகைதா னுண்டோ! கன்னித்
தமிழ்ப்பத்துப் பாவுண்டோ! உன்னி டத்தில்
பொங்கும்நல் பத்தெட்டு கணக்கு முண்டோ!
பார்க்காதே! முறைக்காதே! சீச்சீ போபோ!

உன்காதல் தலைவன்தான் நேரு என்று
ஊராள நினைத்திருக்கும் இந்தி மாடே!
உன்னகத்தி லுனக்கேநேர்ப் பகையாய் மக்கள்
உணர்வெழுந்து நிற்கின்ற இந்த வேளை,
தென்னகத்தில் நீவந்தால் அய்யோ! பாவம்!
திராவிடரின் மொழிப்பற்ருல் அழிந்தே போவாய்!
பின்னருந்தன் மொழிக்கொள்கை யென்ன வாகும்?
பேச்சேனே! உன்னிடத்தில், சீச்சீ போபோ!

**வெஞ்சினவேல்**

## கடைசிப் பக்கத் தொடர்ச்சி

செயலில் இறங்கவேண்டும்...

......நமக்கு மெஜாரிடி பலம் இருக்கிறது என்ற தைரியத்தினுல் விருப்பமில்லாத மக்கள் மீது இந்தி மொழியைக் கட்டாய பாடமாகத் திணித்தால் விளைவு நாம் விரும்புவதற்கு நேர்மாருனதாக முடியும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். இந்தியாவுக்குப் பொதுமொழி தேவை என்பதற்காக எந்த மொழியையும் நாம் வலுக்கட்டாயமாக எவர் மீதும் திணிப்பதென்பது நிச்சயமாகக் கூடாது;'

—இவ்வளவு வீராவேசமாக 1948-ல் முழங்கிய பண்டிதநேரு அவர்கள் 60-ம் ஆண்டில் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி யளித்தவர், இப்போது இரண்டாண்டு காலத்துக்குள் என்ன அவசியத்தைக் கண்டு கொண்டார்!

மெஜாரிடிபலம் இருக்கிறது என்ற தைரியத்தினுல் நாம் எதையும் செய்யக்கூடாது என்று வாதிட்ட பண்டித நேரு எங்கே? இன்றைய நேரு எங்கே!

பண்டித நேரு மட்டுமல்ல! மதிய சர்க்கார் அமைச்சர்களைத் தட்டிக் கேட்கும் தைரியம் படைத்தவர் என்று புகழப்படும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி இன்று அவர் மௌனமாக இருந்தாலும்—அன்று அவர் இலண்டன் மாநகரிலே முழக்கிய முழக்கம்......?

"இந்தி தேசிய மொழியாவதை அரசியல் சக்திகள் அழித்தே தீரும். அறிவுலகுக்கேற்ற மாட்சி என்ன இருக்கிறது இந்தி மொழியில்? பயனற்ற மொழியைக் கற்பதால் பலனெதுவும் ஏற்படாதே! தேசீய மொழியாக்கித் தென்னிந்தியர் ஆத்திரத்தைக் கிளப்ப வேண்டாம்"

—அந்த பழைய முழகத்தில் ஒரு பகுதியை டி. டி. கே. அவர்கள் தனக்கு அருகில் அமர்ந்திருக்கும் கனம் லால்பகதூராருக்கு இடித்துரைக்கக் கூடாதா?

அவராவது பதவி மயக்கத்தில் பழைய முழக்கத்தை மறந்திருக்கலாம். இப்போது இந்தி எதிர்ப்பாளர்களை வன்மையாகக் கண்டிக்கிருரே ம. பொ. சி., அவர் 48-ல் முழக்கிய முழக்கம் தெரியுமா?

"இந்தி இஷ்டபாடமாகக் கூட இங்கு வேண்டாம்"

—என்று 17—7—48ல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் முழங்கியிருக்கிருரே!

பண்டிதர் நேருவே வாக்குறுதி கொடுத்துவிட்டு அதை இப்போது சொந்தக் கருத்து என்று சொல்லி நழுவும் போது, பாவம், ம. பொ. சி. என்ன செய்வார்?

ஆனுல் ஒன்றை மட்டும் இன்றைய தினம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எத்தனையோ கொடுமைகளுக்குப் பிறகு; தாளமுத்து-நடராசன்கள் உயிர்தத்தமாகிய பிறகு, எண்ணற்ற தாய்மார்களும் குழந்தைகளும், பல்லாயிரக்கணக்கான மாவீரர்களும், தென்னகத்தின் மிகப்பெரும் தலைவர்களும் சிறையில் வாடியதற்குப் பிறகு தணியாத மொழியுணர்ச்சி பண்டிதர்களின், சாஸ்திரிகளின் தேசாய்களின் மிரட்டல்களுக்கா பணியப் போகிறது.

"இந்தியை எதிர்க்கிறவர்களுடைய தலைகளையெல்லாம் வெட்ட வேண்டும் என்று 1938-ல் சத்தியமூர்த்தி கர்ஜித்தாராம்!

உடனே மெயில் இதழ் தட்டிக் கேட்டதாம்—அப்படியானுல் கடற்கரையில் தோழர் ஈ. வெ. ராமசாமி தலைமையில் கூடி தீர்மானம் எடுத்த 50,000 மக்கள் தலைகளையுமல்லவா வெட்ட வேண்டியிருக்கும் இதுதானு உமது சுயராஜ்யம், காந்தி கண்ட அன்பினுல் ஆளப்படும் ராஜ்ய பாரம்—என்று மெயில் இதழ் எழுதியதாம்! இதைவிட மிருகத்தனமான தாக்குதலைக்கூடச் சமாளிக்க இன்றைய தமிழகம் தயாராகிவிட்டது!

"இறுமாப்புக் கொண்ட வட இந்திய ஆணவ மன்னர்கள் மீதெல்லாம் வெற்றி கண்ட பரம்பரையில் உதித்த தமிழர்கள் இந்தியை எதிர்த்து நின்று போராடியே தீருவரென நம்புகிறேன். இல்லையேல் தமிழர்கள் தாழ்வுறுவதுடன் தங்கள் நாட்டிலேயே வட இந்தியத் தலைவர்களுக்கு அடிமைகளாகவும் இருக்கவே நேரிடும்" என்று முழங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியாரையும்,

'தமிழர் கலாச்சாரத்துக்கு முற்றிலும் மாறுபாடானது இந்தி' என்று முழங்கிய மறைமலையடிகளாரையும்,

"மனிதரை மந்தியாக்கும் இந்தியை ஏலோம்" என்று கர்ஜித்த தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களையும்.

"ஆருயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்துவந்த வெள்ளையர்களை விரட்டியடித்ததைப் போல் ஓராயிரம் மைல்களுக்கப்பால் இருந்துவந்த வடவர்களை விரட்டியடிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று முழங்கிய டாக்டர் மு. வ. அவர்களையும்,

"தமிழ் மொழி மீது பிற மொழி ஆதிக்கம் கண்டு பொறுத்திரார் தமிழாசிரியர்" என்று 1938ல் இருந்து தொடர்ந்து இந்தியை எதிர்த்து வரும்—இன்றும் தள்ளாத வயதிலும் தமிழ்ப் பணியாற்றி வரும் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களது முழக்கத்தையும்,

மொழி காக்கத் தாய்மார்களையும் இளங் குழந்தைகளையும் அணி திரட்டிக்கொண்டு சிறை நண்ணிய வீராங்கனைகள் டாக்டர் தருமாம்பாள் அம்மையார், இராமாமிர்தம்மாள் ஆகியோரின் தியாகத்தையும் தென்ஞட்டின் ஆற்றல் மிக்க வீரர் கூட்டம் இன்னும் மறக்கவில்லை.

தென்ஞட்டவர்களின் ஆற்றல் குறித்து காசி பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் அமர்நாத்ஜா அவர்களது கருத்தை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிருேம். 'தமிழ் அல்லது தெலுங்கு போன்ற தொன்மையும் செம்மையும் வாய்ந்த உயர் தனிமொழி, இந்தி போன்ற ஒரு மொழிக்கு திடீரென தலைவணங்கி விடுமென நாம் எதிர்பார்க்க முடியாது.'

இந்தி வெறியர்களே! இது மட்டுமல்ல! தென்ஞட்டவருக்கு இந்தி தேவையில்லை என்பதற்கு, தி. மு. கழகத் தலைவர்களின் வாதத்தையல்ல, டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் என்னும் நடுநிலையாளர் ஒருவரது கருத்தையாவது அமைதியோடு நோக்குங்கள்:-

"தென்ஞட்டு மக்களில் பெரும்பாலோருக்கு இந்தி தேவையில்லை. தென்ஞட்டில் 100க்கு 65 பேருக்கு மேல் அவர்கள் மாவட்டத்தை விட்டு அப்புறம் போகத் தேவையில்லை. எனவே இந்தி அவர்களுக்கு முக்கியமுமல்ல — உபயோகமானதுமல்ல"

ஆகவே இந்தி வாலாக்களின் இந்தித் திணிப்புக்கு ஆதிக்க நோக்கம்தான் காரணம் என்பது தெளிவாகப் புரிகிறது!

எனவே இந்தித் திணிப்பாளர்களுக்கு எடுத்துக்காட்டுகிருேம்!

திணிப்பு முயற்சியைக் கைவிடுங்கள்!

இந்தி ஆதிக்கத்தைக் கல்லி எறிய தென்னகமே ஒன்று திரள்கிறது!

கட்சி வேறுபாடின்றி இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகப் போர் முரசு கேட்கிறது!

முன்னர் இந்தியைத் திணித்த ஆச்சாரியார் அவர்களே இப்போது அதை எதிர்க்கத் தன்னுடைய தள்ளாத வயதிலும் முன்னணிக்கு ஓடி வருகிருர்.

துணைவேந்தர்கள்—கல்வி நிபுணர்கள்-சர்வகட்சித் தலைவர்கள் அனைவரும் எதிர்க்கிருர்கள் இந்தியை!

வெட்டி வா என்ருல் கட்டி வரக்கூடிய ஆற்றல்மிகு தம்பிமார்களை இலட்சக் கணக்கில் கொண்டிருக்கும் அறிஞர் அண்ணு அவர்கள் எச்சரிக்கை செய்துவிட்டார்!

சர்வ கட்சியினரும் கூறுகின்ற கருத்துக்களை நீங்கள் ஏற்கா விட்டால் காலம் உங்களுக்குப் பாடம் புகட்டியே தீரும்!

"பொதுஜன அபிப்ராயத்துக்கு முரணுக நடக்க எந்த சர்க்காராலும் முடியாது. ஆகவே காங்கிரஸ் சர்க்காரும் தமது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான்"

இப்படிச் சொன்னது யார்? தெரிந்துகொள்ள காங்கிரஸ்காரர்களுக்கு மிக ஆவலாக இருக்கும்!

அப்படிச் சொன்னவர் மறைந்த மேதை டாக்டர் ப. சுப்பராயன் இந்திக் கமிட்டியில் தனது மறுப்புக் குறிப்பை எழுதியவர்—முன்ஞள் மராட்டிய கவர்னர்! அவர் தான் 1937 இந்தி எதிர்ப்பின் போது அப்படிச் சொன்ஞர்.

திருச்செங்கோட்டிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பட்டு பின் கவர்னரானதால் அதைத் துறந்தவர்—அவர்!

அந்தத் திருச்செங்கோட்டில் நீங்கள் செய்த அட்டகாசங்களுக்குக் கிடைத்த தீர்ப்பு இன்னமும் உங்களுக்கு மறந்திருக்காது!

இந்தியைத் திணிக்கும் ஏகாதிபத்தியமே! திருச்செங்கோடு தந்த தீர்ப்பை நினைவில் வை!

ஆன்ருேர்களும் சான்ருேர்களும் கூறும் அறிவுரைகளை மனதில் இருத்து!

மொழியைத் திணித்து விளையாடாதே! முன்னேற்றக் கழகம் முரசு கொட்டும்! முழு மூச்சுடன் எதிர்க்கும்!

அண்ணு ஆணையிடுவார்—அன்னைத் திருநாடு செயல்படும்! முன்னணி வீரர்கள் முழக்கமிட்டுச் செல்வர்!

தாயின் மேல் ஆணையிட்டு, தமிழின் மேல் ஆணையிட்டு, மொழி காக்கும் வீரர் கூட்டம் கிளம்பும்!

ஏகாதிபத்தியமே உணர்ந்து கொள்!

---


### அடுத்த இதழ்
### திராவிடன்
### இந்தி எதிர்ப்பு சிறப்பு இதழ்

4—5—63 அன்று வெளிவரும்.

வி. ஆர். மதனகோபால் பி.காம் வரையும் தொடரோவியம்

**அண்டனி-கிளியோபாட்ரா!**

துவக்கம்.

**விலை 25 காசு.**


---

## 'ரோட்டி பெட்டோ' தொடர்ச்சி

தென்னகத்தில் மூன்ரும் வகுப்பில் கூட மக்கள் தொகை அதிகரிக்கும் நாளில் கூட 'டிக்கெட்' இன்றி பிரயாணம் செய்வதற்கு மிக்கத் துணிவு வேண்டும். அதுவும் எதிர்க்க அல்ல, பெட்டிக்கு பெட்டி மாற; இஃதொன்றே வடவர்க்கும் நம்மவர்க்கும் இடையேயுள்ள பண்பாட்டு வேற்றுமையை எடுத்துக்காட்டவல்ல தக்க சான்ருகும்.

என்னுடன் வந்த காங்கிரசு நண்பர்கள் தி. மு. கழகத்தின் மற்ற பிரச்சினைகளில் வேறுபட்டிருப்பினும் இந்தி ஆதிக்கத்தைப் பொறுத்தவரை தி. மு. கழகப் பணியைப் பாராட்டத் தவறவில்லை என்பது மட்டுமல்ல. அதன் பணி மேலும் தீவிரமாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் இந்த இந்தி வெறியர்களின் போக்கு கட்டுக்கடங்கும் என்றுங் கூறத் தவறவில்லை.

'இந்தி வெறி' அம்மக்களைப் பண்பிழந்து நடக்கச் செய்கிறது. தென்னகத்தினின்று வரும் மக்களை அவர்கள் மனிதர்களாகக் கூட மதிப்பதில்லை. அத்தகைய வெறியினரோடு, நெறிமுறை தவராத தென்னகத்தார் எவ்விதம் ஒன்றுபட்டு வாழமுடியும். ஏக இந்தியப் போர்வையில் இருக்கும்வரை இவ்'வெறித்'தன்மை நீடிக்குமே ஒழிய 'இம்மி'யளவுங் குறையப் போவதில்லை.

தென்னகம் தனியாகப் பிரிந்திருப்பின் ஒரு வேளை தோழமை ஏற்படலாம் என்ற எண்ணத்தை என்னுடன் வந்த நண்பர்களின் மனசாட்சி ஏற்றுள்ளது என்ருல் அது அவர்கள் அங்குற்ற அவதிகளின் விளைவு—அவர்தம் உள்ளத்தின் கொதிப்பு எனின் மிகையாகாது.

"மிஸ்டர் ஏ. ஜி. நீங்கள் (தி. மு. க.) சொல்வதுதான் சரி" என்ற சொல் இன்னும் என் செவியில் பசுமையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

# தாயின் மேல் ஆணை!

வாழ்வின் அடிப்படை உரிமைகளுக்குப் போராடி, வெற்றி முரசு கொட்டிய உழைப்பாளர்களின் உரிமைத் திருநாளில், அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமல்லாமல், தன்மானத்தை தரைமட்டமாகும் செயலைத் தடுத்து நிறுத்த வேண்டிய தலையாய கடமை, தென்னகத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, இந்த மண்ணில் பிறந்துவிட்ட ஒவ்வொருவருக்கும் உயிர்ப்பிரச்சினையாக உருவெடுத்துவிட்டது!

முடிமன்னர்கள் ஆண்டிருந்த பண்டைக் காலத்தில் கூட மொழியை விழிபோல் பாதுகாத்தனர்.

மக்களாட்சி நடந்திடும் இக்காலத்தில் தங்கள் மொழியினைப் பாதுகாத்துக் கொள்ள போராட்டங்கள் நடத்த வேண்டியுள்ளது!

இந்தி திணிப்புக்கும் தென்னகத்தின் மொழி உணர்ச்சிக்கும் நடைபெற்ற போராட்டம் ஒரு நீண்ட வரலாறு ஆகும்!

1938-ம் ஆண்டில் நுழைந்த இந்தியை விரட்டியடித்த தமிழ்ப் பெருங்குடி மக்களும், தாய்மார்களும், மீண்டும் புதிய ரூபத்தில் 1948-ல் நுழைந்த இந்தி ஆதிக்கத்தை, தென்னாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் ஒன்று பட்டு துரத்தியடித்தார்கள்.

பின்னர் 1957-ம் ஆண்டிலிருந்தே இந்தி ஆதிக்கம் சிறு சலசலப்புக்களைக் காட்டிவந்தது.

தென்னகப் பெருமக்களும் அப்போதைக்கப்போது தங்கள் கண்டனங்களைத் தெரிவித்து வந்தார்கள்!

கொந்தளிக்கும் அவர்களது மொழி உணர்ச்சி, 1960-ம் ஆண்டு முன்னாள் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்துக்குக் கருப்புக்கொடி காட்ட முடிவு செய்த தி. மு. கழகத்தின் பின்னால் ஒன்று திரண்டு பேருருவாக எழுந்து நின்றது!

அதன் விளைவாகக் குடியரசுத் தலைவர் "தென்னக மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது" என்று வாக்குறுதியளித்தார். பின்னர் அவ்வப்போது பாராளு மன்றத்தில் தி. மு. கழகம் குரல் கொடுத்து வந்ததின் விளைவாக, நேருபண்டிதர் "இந்தி பேசாதவர்களின் மீது இந்தி திணிக்கப் படமாட்டாது—1965-க்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும்", என்று உறுதியளித்தார். அரசினர் செலவில் செய்தித்தாள்களில் விளம்ரம் செய்தனர்!

நேருவின் வாக்குறுதி இன்று காற்றில் பறக்கவிடப்படும் நிலைமையை அடைந்துள்ளது! சொந்த அபிப்ராயமென்றும்—நேருவின் வாகுறுதி மசோதா

**என்.வி.என். சோமு பி.ஏ.**

வில் இடம் பெற்றுள்ளதென்றும் —இடம் பெறவில்லையென்றும் மாறி மாறிப் பேசுகின்றனர் ஆட்சி பீடத்தைச் சேர்ந்தவர்கள்.

ஒரு நாட்டின் பிரதம மந்திரி "பிரதம மந்திரியின் வாக்குறுதி" என்ற தலைப்பிட்டு அளித்த உறுதியைச் சொந்தக் கருத்து என்று கூறும் துணிவு அரசியலை நடத்திச் செல்பவர்களுக்கு ஏற்பட்டு விட்டதென்றால், அந்த ஆட்சி முறையை உலகநாடுகள் எந்த அளவுக்கு மதிக்கும்? இதைக்கூட இந்தித் திணிப்பவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை.

நம்மையெல்லாம் ஒன்று கூட்டுவிக்கும் ஒரு மொழி தேவை என்று இன்றைய தினம் பண்டித நேரு இந்தித் திணிப்பின் அவசரத்துக்கு காரணம் காட்டுகிறார்.


ஆனால் அன்றைய பண்டித நேரு 48-ம் ஆண்டில் என்ன பேசினார்?

"மொழி ஒரு தனிமனிதன் வாழ்க்கையிலே மட்டுமல்ல, ஒரு சமுதாயத்தின் ஒரு இன மக்களின் வாழ்க்கையிலேயும் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. எனவேதான் சொல்கிறேன், இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மொழிப் பிரச்னையில் நாம் ஈடுபடும்போது நன்றாகச் சிந்தித்து முற்றமுடிய எல்லா விளைவுகளையும் சீர்தூக்கி வைத்து எண்ணிப் பார்த்து பிறகுதான்

(15-ம் பக்கம் பார்க்க)


வெற்றி முரசு கொட்டுகிறது!

சென்னை
பிளாசா-மேகலா
முருகன்-ஜெயராஜ்
(சைதாப்பேட்டை)
மற்றும்
தென்னகமெங்கும்



சரோடி பிரதர்ஸ்
கலை அரசி
விஞ்ஞான அற்புதங்களை விளக்கும் ஒரு புதுமைச்சித்திரம்..
டைரக்ஷன் · A. காசிலிங்கம்
வசனம்... ரவீந்தர் · இசை.. K.V. மகாதேவன்
ஒளிப்பதிவு.. J.G. விஜயம்... கலை.. பொன்னுசாமி
ஸ்டுடியோ.. கோல்டன்
RKF
WORLD NEGATIVE RIGHTS CONTROLLED BY
ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் (பி) லிமிடெட், ஆலப்புழை
சேர்மன் · S. குமாரஸ்வாமி ரெட்டியார்




அசிரியர், வெளியிடுபவர் என். வி. நடராசன். அச்சிடுபவர் சோமு அச்சகம், 163, வால்டாக்ஸ் ரோடு சென்னை-1